விலை ரூபா: 20.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 06 புதன்கிழமை (18.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இந்திய நாடாளுமன்றக் குழுவினர் அரசுக்கு எந்த அழுத்தமும் தரவில்லை

### சந்திப்புக்கு பின் அமைச்சர் பீரிஸ் கருத்து

(கொழும்பு), இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவினர், தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தியுள்ளது. எனினும் அவர்கள் அரசுக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் தரவில்லை. இவ்வாறு அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்தியக் குழுவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது தொடர்பாக எந்தக் கருத்தும் முன்வைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கருத்து வெளியிடுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் அதற்கு இலங்கை அரசு கொடுக்கும் முன்னுரிமை பற்றி அவர்களுக்கு விளக்கினோம். இந்த நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய அமைப்புகள் தொடர்பாகவும் இந்திய நாடாளுமன்றக் குழுவிற்கு விளக்கமளிக்கப்பட் டது.

13வது திருத்தம் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இந்திய குழுவினர் இன்று வடக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழு இன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது. இங்கு வருகை தரும் இக் குழுவினர் இம் மாவட்டங்களில் இடம் பெற்றுள்ள மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பற்றி நேரில் அவதானிப்பர். (ந-8,11)

## பசில் ராஜபக்ஷவுடன் இந்திய குழு சந்திப்பு



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற் கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய சர்வகட்சி பாராளுமன்றக் குழுவினர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கையில் அகதிகள் பிரச்சினை 30 வருட காலமாக இருந்து வரும் ஒன்றாகும். இருந்தபோதிலும் இடம்பெயர்ந்தோரில் 95 வீதமானோரை *(02ஆம் பக்கம் பார்க்க)*

## அதிமுக, திமுக் இடம்பெறாமை பாதிப்பை ஏற்படுத்தாது -அரசு

தமிழகத்தின் முக்கிய கட்சிகளான அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்காமை பாதிப்புகளை ஏற்படுத்தாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.


இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மை நிலைமைகளை அறிந்து கொண்டு அரசாங்கத்தை பாராட்டுவார்கள் என வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் கடந்த மூன்றாண்டுகளில் அரசாங்கம் பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முக்கிய கட்சி உறுப்பினர்கள் விஜயத்தில் கலந்து கொள்ளாதபோதிலும் ஏற்கெனவே திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இந்த விஜயம் நடைபெறுகின்றது.

யுத்தம் *(20ஆம் பக்கம் பார்க்க)*

இந்தியக் குழுவினர் அமைச்சர் பசிலுடனான சந்திப்பின்போது...



## யாழ். இளம் பெண் வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள கிணறொன்றில் இருந்து யாழ்.பல்கலைக் கழக 3-ம் வருட மாணவி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உக்கிளாங் குளத்தில் உள்ள தனது உறவினரின் வீட்டிற்கு வந்த மரியா கெனட் பவுசியா(வயது 25) என்ற பெண் நேற்று முன்தினம் மாலையிலிருந்து காணாமல் போயிருந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த *(20ஆம் பக்கம் பார்க்க)*

## பிரேம்குமார், திமுது கடத்தல் ஐ.நாவில் பிரஸ்தாபிக்கப்படும்

### ஐ.தே.க. எம்.பி லக்ஷ்மன் கிரியெல்ல

முன்னிலை சோஷலிசக் கட்சியின் இரண்டு முக்கிய செயற்பாட்டாளர்கள் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கருத்தில் கொள்ளப்படவுள்ளதால் இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் எவ்வளவு தூரம் சென்றுள்ளது என்பதை அரசாங்கம் விளக்க வேண்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து நிச்சயம் கருத்தில் கொள்ளப்படும். இச்சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு கரிசனையை வெளிப்படுத்துவது அரசாங்கத்தைப் பொறுத்த விடயம்.

இக்கூட்டத் தொடரின்போது இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைமைகள் தொடர்பான மதிப்பீடும் இடம்பெறவுள்ளது.

இதற்காக ஐ.நா. மற்றும் அனைத்து பொது நிறுவனங்கள் தத்தம் நியாயங்கள் மற்றும் விளக்கங்களை எதிர்வரும் 23-ம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும்.

13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துதல், சட்டத்தின் ஆட்சி, ஊடக சுதந்திரம் போன்ற விடயங்களுடன் கடத்தல் மற்றும் காணாமல்போகும் சம்பவங்கள் தொடர்பிலும் இலங்கை மீதான ஐ.நாவின் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தனி ஈழத்திற்கு வாக்கெடுப்பு நடத்துவதை தி.மு.க. ஆதரிக்கும்



### கலைஞர் அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தனி ஈழம் அமைப்பது குறித்து பொதுஜன வாக்கெடுப்பு நடத்தும் யோசனைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வரவேற்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் தனி ஈழம் அமைவது தொடர்பான பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதை தான் ஆதரிப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் *(20ஆம் பக்கம் பார்க்க)*


## காளை மாடு வெட்டுவதற்கு தடை யாழ்ப்பாணம் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பல இலட்சம் பெறுமதியான நல்லினக் காளை மாட்டை வெட்டுவதற்கு தடை விதித்து யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று தீர்ப்பு வழங்கினார்.

நல்லினக் காளை மாடு தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. *(02ஆம் பக்கம் பார்க்க)*



# நீதி வழங்கப்படாவிட்டால் மக்கள் கிளர்ந்தெழுவார்கள்

## பாரதவின் மகள் ஹிருணிகா



(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை வழக்கை முழுநாடும் அவதானித்துக் கொண்டி ருப்பதாகவும் நீதி வழங்கப்படாவிட்டால் நாட்டு மக்கள் அதற்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் எனவும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளானஹிருணிகாபிரேமச்சந்திரகூறியுள்ளார்.

முன்னாள் எம்.பியான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உயிரிழந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் காணப்படும் காட்சிகள் அடங்கிய புகைப்படங்களைநீதிமன்றவளாகத்தில்வைத்து ஊடகவியலாளர்களிடம்காண்பித்தஹிருணிகா, நடுநிலையாக செயற்படுமாறு அதிகாரிகளை வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இங்கு சமுகமளித்திருப்பவர்கள் மாத்திர மல்ல, முழுநாடும் இந்த வழக்கை அவதானித் துக் கொண்டிருக்கின்றது. அனைவரும்நீதியை கோருகிறார்கள். நீதி நிலைநாட்டப்படாவிட் டால் அதற்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுவார் கள் என அவர் கூறினார். (ந-8,11)

# பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு இம்முறையும் தலைமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இம் முறையும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப் பட உள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி பல்க லைக்கழக மாணவர்களுக்கான தலைமைத் துவ பயிற்சி ஆரம்பமாகும் எனவும் இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி வழங்கப்பட உள்ள தாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள் ளார்.

நாட்டின் 30 இடங்களில், பல்கலைக் கழக புதுமுக மாணவர்களுக்கான தலைமைத் துவ பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. கடந்த தடவை பயிற்சி பெற்ற மாணவ மாணவியரின் ஆலோசனைகளுக்கு அமைய, கடந்த கால குறைகளை நிவர்த்தி செய்து இம்முறை பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ள தாக கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண குறிப் பிட்டுள்ளார்.

முதல் கட்டத்தில் பத்தாயிரம் மாணவ மாணவியருக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளது. கடந்த தடவை நடை பெற்ற தலைமைத்துவ பயிற்சியில் மாணவர் கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை, தலைமைத்துவ பயிற்சிக்கு மாணவர் ஒன்றி யங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்தவாறு இல்லை

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த 2 வருட காலங்களில் ஸ்திரத் தன்மை யுடன் இருந்த போதிலும்,

இந்த வருட வளர்ச்சி எதிர்பார்த்த வகை யில் அமையவில்லை என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதான நிலை ஏற்பட் டுள்ள தருணத்தில் இந்த வருட அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்பார்த்த வகையில் அமையவில்லை எனவும், அந்த அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளின் பொருளாதார அபி விருத்தி செயற்பாடுகள் மந்தகதியிலேயே இருப்பதும், இதற்கான காரணமாக அமைய லாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

# சங்கரி, சித்தார்த்தன், சிறிதரன் இந்தியக் குழுவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டுள்ள இந்திய சர்வகட்சி நாடாளுமன்ற உறுப் பினர்களை தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி யின்) செயலாளர் நாயகம் த.சிறீதரன் ஆகி யோர் நேற்று மாலை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது நாட்டின் தற்போதைய நிலை வரங்கள் குறித்து விபரமாக கலந்துரையாடப் பட்டது. சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பின் போது மேற்படி தமிழ் கட்சிகளின் தலைவர்களினால் இந்திய சர்வகட்சி நாடாளு மன்ற குழுவினரிடம்தமிழ்மக்களினதும்நாட்டின தும் நிலைமைகள் தொடர்பாக மகஜர் ஒன் றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

# காலி தமிழர்கள் மீதான தாக்குதல் உரிய நடவடிக்கை இதுவரை இல்லை

## அதிகாரிகள் அசமந்தம்; மக்கள் விசனம்

(காலி)

தென்னிலங்கையில் காலி மாவட்டம் திவத்துர என்ற தோட்டத்தில் மூன்று நாட் களுக்கு முன்னர் தமிழ் தொழிலாளர் குடும்பங் கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர் பில் அதிகாரிகள் இன்னும் உரிய நடவடிக்கை கள் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரத்தில் கத்திகள், தடிகள், பெற் றோல் குண்டுகள் சகிதம் வாகனத்தில் வந்த வர்கள் ஐந்து வீடுகளை தீவைத்து எரித்து விட்டு இன்னும பல வீடுகளை தாக்கிச் சேதப் படுத்திச் சென்றுவிட்டதாகவும் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் சுட்டிக் காட்டினார்.

இந்த சம்பவத்தையடுத்து தமது பாதுகாப் புத் தொடர்பில் பெரிதும் அச்சமடைந்துள்ள தாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை இந்த சம்பவத்துடன் பிரதேச அரசியல்வாதி ஒருவர் சம்பந்தப்பட்டிருப் பதாகவும்பிரதேசவாதிகள்குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன் னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களிட மும் பிரதேச காவல்துறை அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளதாக மக்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஜன நாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் தலைவர் அமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோர் உறுதிப்படுத்தினார்கள்.

ஆனால் இந்த சம்பவத்தில் குறித்த பிர தேசசபை உறுப்பினர் சம்பந்தப்பட்டிருப்ப தாகக் கூறப்படும் குற்றச்சாட்டுப் பற்றி காவல் துறைக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்று இலங்கை காவல்துறை பேச்சாளர் எஸ்.பி. அஜித் ரோகண தெரிவித்தார்.

தனிப்பட்ட ரீதியில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறே இந்த சம்பவத்துக்கு காரணம் என்று அஜித் ரோகண கூறினார்.

சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டார். (ந-8,11)

# பசில் ராஜபக்ஷவுடன்...

அனைத்து வசதிகளுடனும் அரசாங்கம் மீள் குடியமர்த்தியுள்ளது.

அவர்களுக்கு தேவையான உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மிகக் குறுகிய காலத்தில் வழமையான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம் என அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடிய மர்த்துவதில் உட்கட்டுமான வசதிகளை செய்து கொடுப்பதிலும் இலங்கை அரசாங்கத்தின் கரி சினை தொடர்பில் இந்திய சர்வகட்சி பாராளுமன்றக் குழுவினர்திருப்தி அடைந்ததாக அமைச்சின் ஊட கப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ந-8,11)

# காளை மாடு வெட்டுவத...

நீதிவான் மா.கணேசராஜாவால் வழங் கப்பட்ட தீர்ப்பில்,

இவ் வழக்கில் இரு தரப்பு சமர்ப்பணங் களையும், அணைக்கப்பட்ட 'B' அறிக்கை, சத்தியக்கூற்று, ஆவணங்கள் ஆகியவற்றை மன்று மிக கவனமாக ஆராய்கின்றபோது, இவ்வழக்கில் விடயப் பொருளான காளை மாடு இறைச்சிக்காக வெட்டப்பட இருக்கும் வேளையில் இதனை இறைச்சிக்காக வெட் டப்படுவதை தடை செய்யுமாறு இந்துப் பெரி யார்களின் கோரிக்கைக்கு இணங்க, இம் மாட்டினை வெட்டுவதை அரச அதிபர் தடை செய்தமை சட்டத்திற்கு விரோதமானது என வும், அரச அதிபருக்கு அவ்வாறான அதிகாரம் இல்லை எனவும், பொலிசாரைப் பிழையாக அரச அதிபர் வழிநடாத்திய தாகவும் சமர்ப் பணம் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் உரிமையாளரின் காளை மாட்டின் மீதான உரிமையை மன்று எவ்விதத் திலும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. ஆனால் துண்டுப் பிரசுரம் மூலம் மாட்டினை வெட்டு வதாக விளம்பரப்படுத்தி வெட்ட முனைந் தமை ஒரு குறிப்பிட்ட சமூக, சமய உணர்வு களை புண்படுத்தியுள்ளதாக கூறப்பட்டது.

மேலும் குறிப்பாக பௌத்த, இந்து மக்கள் இம்மாடு வெட்டப்படுவதை தடை செய்து நகு லேஸ்வரத்திற்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் உரிமையாளருக்கு நட்டஈட்டை வணி கர் கழகம் மூலம் பெற்றுத் தருவதாக வும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் தமது அதிகார மரபை மீறி செயற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள போதிலும், இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நல்லெண்ணத்தின் அடிப்படை யில் மாட்டினை வெட்டுவதற்கு தடை விதித்த தாக மன்று கருதுகிறது.

ஆகவே குறித்த மாடு தொடர்பாக எழுந் துள்ள சமய, சமூக பிரச்சினைகளை சட்ட நோக்குடன் மட்டுப்படுத்தாது சமுதாய நோக் குடனும் அணுகவேண்டிய தேவை மன்றுக்கு உண்டு. இன, சமய நல்லிணக்கத்திற்கு இது வழிகோலும் எனவும் மன்று நம்புகிறது.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படை களில் மன்று மாடு வெட்டப்படுவதை தடை செய்வதுடன், மாட்டின் மீதான உரிமையை மன்று உரிமையாளருக்கு வழங்கி அதனை உரிமை யாளரிடம் கையளிக்கிறது.

மேலும் உரிமையாளர் மாட்டை வெட்டுவதோ அல்லது வேறு ஏதேனும் வகையில் துன்புறுத் தவோ கூடாது எனவும் மன்று கட்டளை இடு கிறது. மேலும் தேவைப்படின், இணக்கப்பாட் டின் அடிப்படையில் இம்மாட் டினை பராமரிப் பதற்கு, பாதுகாப்பதற்கு இறைச்சிக்காக வெட்டப் படுவதை தடை செய்ததனால் ஏற்பட்ட இழப் பிற்கு அதனை வாங்கிய மாட்டு உரிமையாள ருக்கு ஏற்பட்ட பண ரீதியான இழப்பை ஈடுசெய் யும் வகை யில் நியாயமான நட்டஈட்டை உரிய முறை யில் பெற்றுக் கொள்வதுடன், காளை மாட்டினை நகுலேஸ்வரத்திற்கு கொண்டு சென்று அங்கு பராமரிப்பதற்கும் முடியும். ஆகையால் அவ்வாறான இணக்கப்பாட் டிற்கு வரும் வகையில் ஒரு கால அவகாசத்தை மன்று வழங்குகிறது.

அதுவரை உரிமையாளர் மாட்டின் உயி ருக்கோ, உடலுக்கோ எவ்வித தீங்கும் ஏற் படாத வண்ணம் பாதுகாக்க வேண்டும் என வும் மன்று கட்டளை இடுகிறது.

இவ்வழக்கில் மாட்டை கொள்வனவு செய்தவர் சார்பில் சட்டத்தரணி நுஃமானும்,

காளை மாடு வெட்டப்படுவதை தடுக்கக் கோரி ஓய்வுபெற்ற நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான இ.த.விக்னராஜாவும் மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ந-6,4)

**பணிப்பெண் தேவை**

தினமும் வந்து போய் வீட்டு வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை. (வயதெல்லை இல்லை) சம்பளம் ரூபா 350/- (நாளொன்றுக்கு)

தொடர்பு: 021-7900637 (8186)

**Computer Express**
**Institute Of Information Technology**

Diploma in Microsoft office 3 Months
Diploma in Desktop Publishing 3 Months
Diploma in Web page Designing 3 Months
Diploma in Graphic Designing 3 Months
Diploma in Hardware Engineering 3 Months
Diploma in Computerized Accounting 3 Months
Diploma in Computer Science 4 Months
Hon. Diploma in Computer Science 4 Months
Hon. Diploma in Programming 3 Months
AUTO CAD 3 Months

Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking

100% செய்முறைப்பயிற்சி
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch i - 18.04.2012
Batch ii - 20.04.2012
Batch iii - 21.04.2012
Batch iv - 22.04.2012
Time 9Am or 3PM

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna. (ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கொசி Hotel பின்)
T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

## இன்று ஒரு தகவல்

# ஆசையும் அதிகாரமும்

ஒரு ஊரிலே மன்னன் இருந்தார்.

அவர் அயலில் உள்ள தேசத்துடன் படையெடுக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். அந்த இடத்தையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது அவரது ஆசை. எப்போது படையெடுக்கலாம் என்று யோசனை செய்தார்.

இப்படியாக யோசனை செய்து கொண்டிருந்த சமயத்திலே ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார். ''என்ன மன்னா யோசனை? என்றார்.

மன்னர் தனது யோசனையைச் சொன்னார்.

இந்த வேளையிலே மன்னருக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர்குடிக்க வேண்டும் போல் இருந்தது. உடனே அரண்மனை பணியாளரைக் கூப்பிட்டார்.

''போய் எனக்கு தண்ணீர் கொண்டுவா'' என்று சொன்னார். அவர் சென்று ஒரு குவளையிலே தண்ணீர் கொண்டு வந்து ராஜாவிடம் கொடுத்தார். ராஜா அதை வாங்கி குடிப்பதற்காக வாய்க்கருகில் கொண்டு சென்றார்.

அந்தநேரத்தில்,''மன்னா... சற்று பொறுங்கள்!'' என்று அந்தப் பெரியவர் சொன்னார். ஆவலோடு தண்ணீரைப் பருக வாய்க்கருகில் கொண்டு சென்ற மன்னன் அப்படியே நிறுத்திக் கொண்டார். பெரியவரை பார்த்தார்.

உடனே அந்த பெரியவர் சொன்னார்.

''மன்னா இப்போது உங்களைவிட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியென்றால் இப்போது ஒரு குவளை தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்குவீர்கள்? என்று கேட்டார்.

'' இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு... என்னுடைய அரசாங்கத்திலே பாதியையாவது கொடுத்து இந்த தண்ணீரை வாங்கத் தயங்க மாட்டேன்'' என்றார்.

''சரி... இப்போது கையிலுள்ள தண்ணீரை பருகுங்கள்'' என்றார் பெரியவர்.

மன்னர் ஆவலாக தண்ணீரை பருகி முடித்தார். சற்று நேரம் கடந்த பின்னர் மறுபடியும் இந்தப் பெரியவர் பார்த்து கேட்டார்,''மன்னா... நீங்கள் ஒரு குவளை தண்ணீரை குடித்து முடித்து விட்டீர்கள்... இப்போது அந்த தண்ணீர் வெளியில் வரக்கூடிய பாதை அடைபட்டு போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை வெளியேற்றுவதற்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்வீர்கள்? என்று கேட்டார்.

மன்னர் யோசித்தார்.'' அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், என்னுடைய அரசாங்கம் பூராகவும் அதற்கு ஈடாக தரவும் தயங்க மாட்டேன்'' என்றார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார் '' எந்த அரசாங்கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையோ அந்த அரசாங்கத்தை அடைய வேண்டுமென்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே... அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? என்றார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதிலே தெளிவு உண்டானது. தன் மனதிலே உண்டான வெறியை விரட்டி அடித்தார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி செய்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீனவர் சம்மேளன பிரதிநிதிகள் இந்திய குழுவை சந்திக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளடங்கிய மகஜர் ஒன்று நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இந்திய நாடாளுமன்ற குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இலங்கைக்கு நேற்று முன்தினம் மாலை வருகை தந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு யாழ். மாவட்டத்திற்கு நாளை வியாழக்கிழமை வருகை தரவுள்ளனர்.

இந்திய நாடாளுமன்ற குழுவினரை நாளை காலை நல்லூர் முருகன் கோவில் முன்றலில் சந்தித்து கலந்துரையாடி மகஜர் ஒன்றினை கையளிக்கதீர்மானித்துள்ளதாகவடமாகாண மீனவர்களின் சமாச பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பினை மீனவர்களின் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு அமைய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்துள்ளார் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்திய நாடாளுமன்ற குழுவை சந்தித்து மகஜர் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்பில் அத்துமீறி இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை தடைசெய்ய வேண்டும் என வடமாகாண மீனவர் சங்க பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வலியுறுத்தினர். இந்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் குறிப்பாக வடபகுதியில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதனால் வடபகுதி மீனவர்கள் தொடர்ந்து பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைக் கட்டுப் படுத்த இந்திய அரசாங்கத்திடம் பலமுறை எடுத்துக் கூறியும் இதுவரை இந்திய மீனவர்களை தடுக்க எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ். மாவட்டத்திற்கு முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் வந்த போதும் எமது பிரச்சினை தொடர்பாக எடுத்துரைத்தோம். அவரிடமும் மகஜர் கையளித்தோம்.

இந்திய துணைத்தூதுவரிடமும் பல்முறை மகஜர் கையளித்துள்ளோம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா யாழ். மாவட்டத்திற்கு வந்த போதும் மகஜர் கையளித்தோம்.

இதுதவிர கச்சதீவில் இந்திய மீனவர்களைச் சந்தித்து கலந்தரையாடினோம்.

ஆனால், எமது கோரிக்கைகள் நிறை வேற்றப் படவில்லை. தற்போது இந்திய நாடாளு மன்ற குழுவினரிடமும் மகஜர் கையளிக்கவுள்ளோம்.

பார்ப்போம் இவர்களாவது எமது கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றார்களா என்று மீனவர் சங்க பிரதிநிதியொருவர் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்தார்.

(அ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 | 20 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 35 | 40 |
| தக்காளி | 70 | 80 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25-30 | 30 | 25 | 30 |
| கோவா | 10-15 | 10 | 20 | 20 |
| கரட் | 35 | 50 | 40 | 60 |
| பூசணி | 25-30 | 20 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 20-25 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-70 | 40-60 | 60 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 80-90 | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | -- | 70 |
| பயற்றங்காய் | 40 | 80 | 70 | 40 |
| லீக்ஸ் | 120 | 70 | 60 | 100 |
| பீற்றூட் | -- | 40 | 20 | 70 |
| கறிமிளகாய் | 40 | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 300-350 | 400 | 400 | -- |
| போஞ்சி | 40 | 100 | -- | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 15 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 25 |

## இராசி பலன்

*18.04.2012*
*(சித்திரை 06, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*சுவாதி காலை 8.52 மணிவரை*
*பூரட்டாதி மாலை 6.08 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** சுப செலவுகள் அதிகரிக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொழில் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக்கண்டு கொள்வீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும், ஆரோக்கியமான நாள்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவை மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், வாகனங்களில் செல்லும்போது விழிப்புணர்ச்சி தேவை, ஆரோக்கியக் குறைவான நாள்.

**கன்னி** மாலை நேரப் பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், விருந்து விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக் கள் வந்து சேரும்.

**தனுசு** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், வாகன மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும், ஆரோக்கியம் சீராகும், சகோதர வழி ஒத்துழைப்பால் பாகப்பிரி வினைகள் சுமுகமாக முடியும், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்புகள் எளிதில் ஈடே றும், பணவரவு திருப்திதரும், மனையில் மங்கல ஓசை கேட்புதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த்தொடர்புகள் விரிவடையும், கற்பனைகள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

# சாவகச்சேரி வடக்கில் ஆணின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்கிணறு ஒன்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வேளையில் குறித்த கிணற்றில் துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் அப்பகுதி கிராம சேவையாளருக்கு தெரிவித்ததையடுத்து கிராம சேவையாளர் ஊடாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் செ. கணபதிப்பிள்ளை முன்னிலையில் சாவகச்சேரி பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் ஆனந்தராஜா (வயது55) என்பவரது சடலம் என இனங்காணப்பட்டுள்ளது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதவான் உத்தரவிட்டார். (அ-3-29)

# கொள்ளைச்சம்பவங்களை தொடர்ந்து இனந்தெரியாதோரின் நடமாட்டம்

## அச்சத்தில் சுன்னாக மக்கள்

சுன்னாகத்தில் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கி முனைக் கொள்ளை சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றநிலை நீடிப்பதாக அப்பகுதி வாழ் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இப்பதற்ற நிலைக்கு நேற்றும் நேற்று முன்தினம் இரவும் இனந்தெரியாதோரின் நடமாட்டம் காரணம் என அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம், கந்தரோடை மடத்தடியிலும், ஸ்கந்தவரோதய பாடசாலைக்கருகிலும் நடைபெற்ற தொடர் அச்சம் தரும் கொள்ளைச் சம்பவத்தினை அடுத்து அப்பிரதேச மக்களினை தொடர்ந்தும் பதற்றத்திற்கு உள்ளாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று தொடர்ந்தும் மறு நாட்கள் நள்ளிரவு 12 மணியளவில் இவ்வாறான வான் நடமாட்டங்கள் அதிகரித்திருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும் இப்பகுதியில் நடமாடுபவர்கள் புலனாய்வாளர்கள் என தம்மை அடையாளப் படுத்திக்கொள்வதுடன் சிலர் அப்பிரதேசத்திலுள்ள செல்வந்தர்கள் பற்றியும் விரிவாக விசாரித்தும் வருகின்றனர். இப்புலனாய்வாளர்கள் தொடர்பில் அப் பிரதேச இளைஞர்கள் சந்தேகம் கொண்டு அவர்களிடம் புலனாய்வாளர்கள் என்பதற்கு அடையாளப் படுத்துமாறு கூறப்பட்ட போது அவர்களினை அச்சுறுத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதிலும் பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் அப்பகுதியில் குறைவாக உள்ளதாக அப்பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-4)




# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம்,அராலி, கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, கோம்பயன் மணல் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 523 ஆவது படைப்பிரிவினரால் புத்தாண்டு விழாவிற்கு ஏற்பாடு

(சாவகச்சேரி)

தமிழ்-சிங்கள புத்தாண்டை அடுத்து தென்மராட்சி பிரதேச மக்களுக்கான கலை கலாச்சார நிகழ்வுகளும் விளையாட்டுப்போட்டி, இசைக்கச்சேரிகள் என்பன நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 22 ஆம் திகதியும் 523 ஆவது படை அணியினரால் நடத்தப்படவுள்ளது.

இதில் கலை, கலாசார நிகழ்வுகளும் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்திலும் விளையாட்டுப்போட்டி, இசை நிகழ்ச்சிகள், வான வேடிக்கைகள் சாவகச்சேரி நகரசபை பொதுவிளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த மாணவர்கள், விளையாட்டு கழகங்கள், சனசமுக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் தனிநபர்கள், குழுக்கள் பங்குபற்ற முடியும்.

பங்கு பற்ற விரும்புவோர் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் உள்ள கைத்தொழில் வணிகர்மன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கலை, கலாசார நிகழ்வுகளில் மாணவர்களுக்கான கோலம் போடும் போட்டியும் குழுக்களுக்கான கும்மி, கரகாட்டம், கோலாட்டம், காவடி ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

நடன நிகழ்வில் 8 பேர் கொண்ட குழுக்கள் பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு நிகழ்வுகள் காலை 6.30 மணி தொடக்கம் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம்,மரதன் ஓட்டம் என்பவற்றுடன் ஆரம்பமாகி சிறுவர், பெண்கள், முதியோர் ஆகியோருக்கான 32 வகையான போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியோர் அனுசரணை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# ஸ்ரீநாராயண ச.ச.நிலைய வைர விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும், கடந்த 13 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

நிலையத்தலைவர் தெ. சுகிர்தன் தலைமையில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இராணுவ முகாம் அதிகாரி லெப்டினல் பி.எம்.ஏ. பி.எஸ் சமரக்கோன், டாக்டர் தாரிணி குருபரன், இலங்கை மின்சார சபையின் வடமாகாண உதவிக் கணக்காளர் க. சுரேஸ்நேசன், நா. சுந்தரலிங்கம் (சுவிஸ்), பொதுப் பரிசோதகர் ரி. றவினதாஸ், மு/மாங்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் செ. பதீஸ்ராஜா, அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் தலைவர் நா. கிருஸ்ண பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் சனசமூக நிலையத்தின் முன்னைநாள் தலைவர்களை கௌரவித்தலும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலைய நிர் வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# படகுச்சேவை

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கிடையிலான பயணிகள் படகுச்சேவையின் புதிய நேர அட்டவணை நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறியினால் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைவாக குமுதினி, வடதாரகை-II ஆகிய படகுவச்சேவைகள் ஞாயிற்றுக்கிழமையில் இடம்பெறமாட்டாது என அறிவித்துள்ளார்.ஏற்கனவே சனி, ஞாயிறு தினங்களில் இச்சேவை இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-9)

# மும்முனை பட்டிமண்டபம்




(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் மும்முனை பட்டிமண்டபம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பட்டிமண்டபத்தில் கம்பவாருதி இ. ஜெயராஜ் நடுவராக கடமையாற்ற வள்ளுவர் தம் முப்பாலில் பெரிதும் முன்நிற்பது அறமே, பொருளே, இன்பமே என்ற தலைப்பில் விவாதிக்கவுள்ளனர்.

அறமே என்ற தலைப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த புலவர் இரே.சண்முகவடிவேல், கவிஞர் த. நாகேஸ்வரன், பொருளே என்ற தலைப்பில் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், சோ. கோகுலன் ஆகியோரும் இன்பமே என்ற தலைப்பில் தமிழ்நாட்டை சேர்ந்த வழக்கறிஞர் த. இராமலிங்கம், அ.வாசுதேவா ஆகியோரும் விவாதிக்கவுள்ளனர்.

எனவே இந்நிகழ்வில் மாணவர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் பொதுமக்களையும் கலந்து பயனடையுமாறு தென்மராட்சி இலக்கிய அணியினர் அறிவித்துள்ளனர். (அ-3-29)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் தேவஸ்தான தேர்த்திருவிழா நிகழ்வில் சுவாமி தேரில் ஆரோகணிப்பதற்காக வருவதையும் தேரில் பவனி வருவதையும் காவடிகளின் அணிவகுப்பையும் படங்களில் காணலாம்.

# மகிழங்குளம் பிரதேச மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குங்கள்

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

(வவுனியா)



வவுனியா மகிழங்குளம் மக்களுக்கு அத்தியாவசிய வசதிகளை செய்து கொடுக்குமாறு சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

வவுனியா ஓமந்தைக்கு அருகிலுள்ள மகிழங்குளம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஆறுமாதங்களாகியும் அவர்களுக்கான அத்தியாவசிய உட்கட்டுமானங்கள் மற்றும் மீள்குடியேற்ற வசதிகள் செய்யப்படாமலுள்ளதாக அப்பகுதி மக்கள் வன்னிப் பாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.அவர்களின் முறைப்பாடுகளை அடுத்தே சிவசக்தி ஆனந்தன் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

1997 ஆம் ஆண்டு ஜெயசிகுறு நடவடிக்கையின் போது இவர்கள் மீண்டும் இங்கிருந்து இடம்பெயர்ந்து மடு, வவுனியா பூந்தோட்டம், நெளுக்குளம் போன்ற முகாம்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் மற்றும் வன்னியின் ஏனைய பகுதிகளிலும் தஞ்சம் புகுந்தனர்.

இறுதி யுத்தத்தின் பின்னர் பல்வேறு முட்டுக்கட்டைகளின் பின்னர், கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் இவர்கள் மீண்டும் தத்தமது கிராமங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். அவ்வாறு திரும்பியவர்களில் புதிய வேலர் சின்னக்குளத்தில் 100 குடும்பத்தினரும் விளக்கு வைத்தகுளம் பகுதியில் 40 குடும்பத்தினரும் மகிழங்குளம் கிராமத்தில் 33 குடும்பத்தினரும் பாக்குச்சொறிஞ்சான் கிராமத்தில் 6 குடும்பத்தினரும் இறம்பைக்குளம் பகுதியில் 5 குடும்பத்தினரும் அடங்குவர். இவர்கள் தவிர இன்னமும் நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் மீள்குடியேறுவதற்காகக் காத்திருக்கின்றனர்.

எனவே, மீள்குடியேற்ற அமைச்சும் மாவட்ட செயலகமும் இணைந்து இம்மக்களுக்கான அடிப்படை வசதிகளை உடன் செய்து கொடுக்க முன்வர வேண்டும்.

இந்நிலையில் மகிழங்குளம் கிராம அலுவலர் பிரிவிற்கென்று ஒரு முன்பள்ளியையும் பொதுக்கிணறும் கட்டிக் கொடுக்க முன்வந்த தொண்டு நிறுவனமும் அரசின் அனுமதி கிடைக்காமல் திரும்பிச் சென்றுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதன் பிறகாவது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# பூநகரி பிரதேசசபைக்கு புதிய உறுப்பினர்கள்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் சித்திரை மாத பொதுக்கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதேச சபையில் பிரதேச சபையின் தவிசாளர் பொ.சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட 4 அங்கத்துவ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வுறுப்பினர்கள் 4 பேரின் இடத்தை நிரப்புவதற்காகவே யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தரால் க. சுதாகரன், க.கணேசன், அ.ஐயம்பிள்ளை, சி.முருகையா ஆகியோர் நிய மனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பிரதேச சபையின் ஆளும் கட்சியை சேர்ந்த 4 உறுப்பினர்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் தமது பதவியை 3 மாதங்களுக்கு முன்பாக இராஜினாமா செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

(அ-9-84)

# பிரபாகரன் தொடர்பான நூலை வெளியிட ஜெயா அனுமதித்தார்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பான நூல் ஒன்றை வெளியிட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இடமளித்துள்ளதாகவும் அவர் இந்தியாவின் தடையை மீறி இந்த சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

தமிழர்களின் போராட்டம் என்ற இந்த நூல் கடந்த வெள்ளிக்கிழமை சென்னை தியாகராஜா மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

பிரபாகரனின் நெருங்கிய நண்பரான நெடுமாறன் நெறிப்படுத்தியிருந்த இந்த நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய வைகோ தமிழர்கள் ஆயுதம் ஏந்த இந்த நூல் வழிகாட்டும் என தெரிவித்திருந்ததாகவும் அப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரபாகரனின் ஆலோசகர் காசி ஆனந்தன், வைகோ, நெடுமாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நல்லகண்ணு, மணிராசன் ஆகிய புலிகளின் ஆதரவாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-2)

## பொதுக்கூட்டம்

அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் , செயலர் பொ. கமலநாதன் , வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் வசந்தமாலா மனோகரன், நிர்வாக உத்தியோகத்தர் து.அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)


INTERNATIONAL ENGLISH QUALIFICATIONS

IELTS BRITISH COUNCIL

IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

What is IELTS?

IELTS is the international English Language Testing System, the world's proven English language test. Over 1.5 million candidates took the test evetry year to start their journeys into international education and employment.



We Provide

1. A Placement test which determines to which level of English you belong Updated course modules
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. 40 Practice test. 4. Free IELTS pack & Mock Exams

நீங்கள் ஏன் IELTS பாட நெறியை City College பின் பற்றவேண்டும்.

Our teachers have undergone IELTS Teacher pveparation at the BRITISH Council

எந்த நேரத்திலும் எமது கல்லூரிக்கு வந்து Listening pracfice செய்ய முடியும்.

எமது நூல் நிலையத்தில் வந்து நூல்களை வாசிக்க முடியும்.

கடந்த காலங்களில் எமது மாணவர்கள் Band 8 வரை பெற்றிருக்கின்றனர்.



IELTS Registration Center For British Council

IELTS பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் 30.06.2012 இல் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள் 21.04.2012 இல் ஆரம்பமாகும்.

கடந்த February 18 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற IELTS பரீட்சையில் எமது கல்லூரி மாணவர்கள் பலர் 7.5 ற்கு மேல் Band இல் பெற்றிருக்கின்றனர். ஒரு மாணவர் 8.5 Band பெற்றிருக்கின்றார்.

10 வாரங்களில் நடைபெறும் இந்த வகுப்பில் சேருங்கள் 6.5 ற்குமேல் Band பெறுவீர்கள் என உறுதி கூறுகின்றோம்.

(ஐ/6333)

| Course Schedule | Sat & Sun | Mon, Tue, Wed, Thu |
|---|---|---|
| Duration | 10 weeks | 23.04.2012 |
| Time | 8.30.11.30 a.m | 4.30 - 6.00 p.m |

வகுப்புகள் 21.04.2012 ஆரம்பம்

CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0212220384 - 0778803887 - 0754164429

# ஐந்து வீடுகளை தீக்கிரையாக்கிய சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் இல்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

காலி- திலிதுற தோட்டத்தில் புதுவருட தினத்தன்று தமிழ்த் தொழிலாளர் குடும்பங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் அதிகாரிகள் இன்னும் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இரவு நேரத்தில் கத்திகள், தடிகள், பெற்றோல் குண்டுகள் சகிதம் வாகனத்தில் வந்தவர்கள் ஐந்து வீடுகளை தீவைத்து எரித்துவிட்டு இன்னும் பல வீடுகளை தாக்கிச் சேதப்படுத்திச் சென்று விட்டதாகவும் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தமிழோசையிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து தமது பாதுகாப்புத் தொடர்பில் பெரிதும் அச்சமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். இதே வேளை, இந்த சம்பவத்துடன் பிரதேச அரசியல்வாதி ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் பிரதேசவாதிகள் குற்றஞ்சாட்டினார்கள்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடமும் பிரதேச பொலிஸ் அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஜனநாய மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் முத்து சிவலிங்கம் ஆகியோர் பிபிசியிடம் உறுதிப்படுத்தினர்.

ஆனால், இந்தச் சம்பவத்தில் குறித்து பிரதேசசபை உறுப்பினர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுப் பற்றி முறைப்பாடு கிடைக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிப்பட்ட ரீதியில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று அஜித் ரோஹண கூறினார். சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# இலவச மருந்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நாரந்தனை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள்; 680 உரிமையாளர்கள் கைதாகினர்

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்த 680 வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பண்டிகை காலத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தில் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்கள் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது பாவனைக்கு உதவாத பொருட்கள், லேபல் அற்ற உணவு, காலவதியான உணவு என்பவற்றை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)

# டெங்குநோய் தாக்கம்; மாணவர்களே கவனம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலைத் தவணை ஆரம்பிக்கப்படும் போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை விடுமுறை வழங்கி மூன்று வாரங்கள் சென்றுள்ள நிலையில் பாடசாலைகள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதாகவும் அங்கு டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய இடங்கள் உருவாகியிருக்கும் என்றும் சுகதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

விசேடமாக தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையில் டெங்கு நோய் பரவுவதற்கேதுவான காரணியாக அமையும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் அடுத்த வாரம் பாடசாலை ஆரம்பிக்கப்ப்ட்டதும் பாடசாலை சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுக்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு நாளைக்கு 2 மணித்தியாலங்களாவது பாடசாலையை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மாணவர்களை ஈடுபடுத்துமாறு அவ் அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)

# நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் இந்து சமய மேம்பாடு கருதிய ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. இந்நூல்கள் பொதிகளாக்கப்பட்டு ஒவ்வொரு நூல் தொகுதியும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் சனசமூக நிலைய ஊடகங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்படுவதாக அதன் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இவ்நூல் விநியோக நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் கல்ந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூற் பொதிகளை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ள கடிதத்துடன் இவ்வைபவத்தில் கலந்த கொண்டு நூற்பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சாவல்கட்டுப் பகுதியில் படையினரால் கிணறு அமைப்பு



மானிப்பாய் சாவல்கட்டுக் கிராமத்தின் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த கிணறொன்றை அப்பகுதியில் கடமையில் ஈடுபடும் 11 ஆவது சிங்க றெஜிமென்றினரால் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இராணுவ உயரதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் தண்ணீர்த் தட்டுப்பாடு குறித்து முறையிட்டதனைத் தொடர்ந்து இப்பகுதியில் இக்கிணறு கட்டப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இக் கிணறு தோண்டும் பணி முடிவுற்ற பின் கடந்த 13 ஆம் திகதி யாழ். கட்டளைத் தளபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் மக்களின் தண்ணீர் தட்டுப்பாடு நீங்கும் என் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# மீள்குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென ஈ.பி.டி.பி.பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், உடுவில் பிரதேச செயலக பிரிவில் புதிதாக மீள்குடியேறிய மக்களுக்கு உலக விவசாய அமைப்பின் அனுசரணையில் வழங்கப்பட்ட விவசாய உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு அரசு பல்வேறு உதவிகளை மேற்கொண்டுள்ளது. மேற்கொண்டும் வருகின்றது. மீள்குடியேறிய பிரதேசங்களின் மேம்பாடு வரை பலமில்லியன் ரூபாய்களை செலவு செய்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் அதேவேளை உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் அரசு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

யாழப்பாணத்தின் மீள்குடியேறிய மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். அரச செயலகத்தில் மீள்குடியேறிய மக்களின் தேவைகள், பிரச்சினைகளை ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடலொன்றும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் மீள்குடியேறிய மக்களின் தேவைகளை நிறைவு செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

எனவே, கடந்த காலம் போன்று இனி வரும் காலத்திலும் மீள்குடியேறிய பிரதேசத்திலும் மக்களினதும் வாழ்வாதார மேம்பாட்டிலும் எமது நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

விவசாயிகளும் சந்தையின் கேள்வி நிரம்பல்களைக் கவனத்தில் எடுத்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவர்களும் உரிய சந்தை வாய்ப்பினைப் பெற்று மேம்பாடடைய முடியும் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

# 'நந்தன' புதுவருட இராசி பலன்கள்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**இடப குருவின் பார்வையினால் நினைத்தது எல்லாம் நிறைவேறும்!**

**பார்த்தவர்கள் அனைவரும் பாராட்டும் விதத்தில், வார்த்தைகளை வீசி, வருபவர்களை எல்லாம் வசமாக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

உங்கள் சிந்தனைகள் அனைத்தும் செயலாகும் விதத்தில் வருடத் தொடக்கமே வசந்தமாக இருக்கிறது. ஒன்பதுக்கு அதிபதி சந்திரன் 2-இல் உலா வர, அதைத் தன பஞ்சமாதிபதி குரு பார்ப்பதால் குருச்சந்திரயோகம் செயற்பட்டு ஆண்டு தொடங்குகிறது. எனவே, பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

வருடத் தொடக்கத்தில் இலாப ஸ்தானத்தில் இராசிநாதன் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சுக்கிரன், இப்படி அற்புதமான கிரக அமைப்புகளின் ஆதிக்கம் இருப்பதால் வாகன யோகம்முதல் வளம்தரும் யோகம்வரை அனைத்தும் கிட்டும். தொழிலில் இலாபம் குவியும்.

உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உன்னத முன்னேற்றமும், அதிகாரிகளால் அனுகூலமும் கிடைக்கும். ஒருசிலர் உத்யோகத்தில் இருந்தபடியே மனைவி, மக்கள் பெயரில் தொழில் தொடங்கும் வாய்ப்புக்களும் உருவாகும்.

புகழ், கீர்த்தி, செல்வாக்கு, பட்டம், பதவி ஆகியவை தானாகவே வந்துசேரும். சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் மட்டும் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

உங்கள் சுயஜாதகத்தில் பாக்கியாதிபதியின் பாதசார பலம் அறிந்து, நவாம்ச நிலையும் அறிந்து யோக பலம்பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் வளர்ச்சி மீது வளர்ச்சிஏற்படும்.

உங்களுக்கு இந்த நந்தன புத்தாண்டு எப்படி இருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை!**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். இல்லம் தேடி இனிய செய்தி வந்துகொண்டேயிருக்கும். நல்லவர்களின் தொடர்பால். நலம் காண்பீர்கள்.

ஏழரைச் சனி மாறி, இலாப ஸ்தானம் பலப்படுகிறது.எனவே, பொருளா தார நிலைஉயரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வைப்பார்கள்.

**தேவைகளை பூர்த்தி செய்யும்குரு பெயர்ச்சி**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். உங்கள் இராசியைப் பொறுத்தவரை அவர் தனாதிபதியாகவும், பஞ்சமாதிபதியாகவும் விளங்குகிறார். அவர் உங்கள் இராசியை நேர்பார்வையாகப் பார்க்கும்பொழுது, நிகழ்காலத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

இமயம்போல் புகழ்பெறவும், இதயம் மகிழும் விதம் வாழ்க்கை நடத்தவும், வருமானத்தைக் குவிக்கவும், வளர்ச்சிப்பாதையில் அடியெடுத்து வைக்கவும் ஏழில் சஞ்சரிக்கும் குருபகவான் இனிய வாய்ப்புக்களை வழங்கப் போகிறார். குடும்ப ஒற்றுமை கூடும். எதிரிகள் மனம் மாறி உங்கள் இனிய பணிக்கு ஒத்துழைப்புச் செய்வர்.

உறவினர்களின் ஆதரவோடு உயர்ந்த நிலையை அடையப்போகிறீர்கள். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு 3, 11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது. குருவின் பார்வை1, 3, 11 ஆகிய இடங்களில் பதியும்பொழுது, தேக ஆரோக்கியம் சீராகும்.

**சிவல்புரி சிங்காரம்**

வழக்குகளில் வெற்றிகிட்டும். வாரிசுகள் பிறக்கவில்லையே என்ற கவலை அகலும். உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். இலாப ஸ்தானம் பலப்படுவதால் தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இலாபம் இருமடங்காக வந்துசேரும். பூமி விற்பனையால் ஆதாயம் கிட்டும். சாமி துணையோடு சகல காரியங்களிலும் வெற்றிபெறுவீர்கள்.

இக்காலத்தில் குரு கவசம் பாடி, குரு வழிபாடு செய்வதோடு, சனிக் கவசம் பாடி இலாப ஸ்தானம் சனியையும் பலபடுத்தும் விதத்தில் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொண்டால், சகல யோகங்களும் வந்து சேரும். அந்நிய தேச வாய்ப்புக்களும் எண்ணியபடியே உருவாகும்.

**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**

ஆனி 9 ஆம் திகதி முதல் ஆடி 29 ஆம்திகதி வரை உங்கள் இராசிக்கு 11 ஆம்இடத்தில் செவ்வாயும், சனியும் ஒன்று கூடுகிறார்கள். இராசிநாதனும், சகாய ஸ்தானாதிபதியும் இலாப ஸ்தானத்தில் ஒன்று சேருவதால், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வங்கிச் சேமிப்பு உயரும். அலை பாயும் மனதிற்கு அமைதி கிடைக்கும் விதத்தில் உல்லாசப்பயணங்களை மேற்கொள்வீர்கள். ஊர் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். குடும்பச் செலவுகூடும் இந்த நேரத்தில் அன்ன தானத்திற்கும், ஆன்மீக பணிக்கும் செலவிடுவது நல்லது.

**தொடர்புகளை பலப்படுத்துமா? துலாம் இராசிச்சனி!**

ஆவணி 27 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சனி உச்சம்பெறப்போகிறார். எனவே, வரைவைக் காட்டிலும், செலவுகூடும். வருமானம் அதிகரிக்க என்ன வழி என்று யோசிப்பீர்கள்.

பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்கும், பெரிய தொழில்கள் செய்ய அரசு வழியில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கவும், அந்த உச்ச சனி வழிவகுத்துக் கொடுக்கும். நீண்ட தூர பயணங்களுக்கு ஏற்பாடு செய்து நீடித்த நாட்கள் ஆகியதே என்று கவலைபட்டவர்களுக்கு கடல் பயண வாய்ப்புக்கள் கைகூடும்.

**வக்ர குரு கொடுக்கும் பலன் என்ன?**

புரட்டாதி 26 ஆம் திகதி முதல் தை 24 ஆம்திகதி வரை இடபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறப் போகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 2, 5க்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறும் பொழுது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு காட்டுவது நல்லது. தொழிலீல் உள்ள கூட்டாளிகளிடம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

கோபம், படபடப்பு ஆகியவற்றை குறைத்துக்கொண்டு அன்பு மேலோங்கி மற்றவர்களோடு பேசுவதன் மூலம் உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் வளர்ப்பில் கொஞ்சம் கவனம் தேவை. அவர்கள் உங்கள் சொற்படி கேட்டு நடக்கும் விதத்தில், அறிவுரை கூறுவது நல்லது. குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம்.

**பாம்புக்கிரகப் பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம் திகதி துலாம் இராசியில் இராகுவும் மேஷ இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை பன்னிரண்டாம் இடத்தில் இராகுவும், ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் மிகுந்த நன்மைகளை வழங்க போகிறார்கள்.

பாம்புக்கிரகங்கள் மறைவிடத்தில் சஞ்சரிக்கும்பொழுது, நிறைவான பலன்களை வழங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

ஆறில் கேது சஞ்சரிப்பதால், உத்தியோகத்தில் இருப்பவர்கள் விரும்பிய தொழிலைச் செய்ய முன்வருவர். கூட்டாளிகள் தானாகவே வந்திணைவர். கடன் சுமை குறையும். அண்டை, அயலாருடன் ஏற்பட்ட பிரச்சினைகள், நல்ல முடிவிற்கு வரும்.

இக்காலத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து சந்தோஷங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**வக்ர சனியால்வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1 ஆம்திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம் திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் 3-4 க்கு அதிபதியாக விளங்குகிறார். எனவே, அதன் வக்ரம் நன்மையைச் செய்யும் என்றே சொல்லலாம். மூன்றுக்கு அதிபதி வக்ரம்பெறும்பொழுது, முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். முடிவு எடுத்த சில காரியங்களில் மாற்றம் செய்வீர்கள். ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது.

நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால், தாய்வழி உறவினர்களை அனுசரித்து செல்வது தகுந்த பலனைக் கொடுக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது பழுது பார்க்கும் முயற்சிக்காக செலவிடுவீர்கள். ஒரு சொத்தை விற்கும் பொழுது மற்றொரு சொத்தை உடனடியாக வாங்கிவிடுவதுதான் நல்லது.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

செவ்வாய்க் கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று, முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

நந்தன வருடம் விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு, தன வரவு தாராளமாக வந்துசேரும். பணப் புழக்கம் அதிகரிப்பதால், ஆபரணம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். முன்பு உங்கள் பெயரில் வாங்கிய இடங்களில், இப்பொழுது கடைகளும், காம்ளக்ஸ்களும் கட்டி வாடைக்கு விடலாமா? என்று சிந்திப்பீர்கள். குருப் பெயர்ச்சிக்கு பின்னால், குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பெண்குழந்தைகளின் சுபச்சடங்குகள் முதல் பெற்றோர்களின் மணி விழாக்கள் வரை நடத்தி பார்க்க முன்வருவீர்கள். சனி, செவ்வாய் இணையும் நேரத்தில் மட்டும் குடும்பச் சுமைகூடும். இராகு, கேது பெயர்ச்சிக்குப் பின்னால், நல்ல வாய்ப்புக்களும், அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் வந்து சேரும். சுய ஜாதக ரீதியாக தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

## புகழ், கீர்த்தி, செல்வாக்கு, பட்டம், பதவி ஆகியவை தானாகவே வந்துசேரும்..!



# திருமண வாழ்க்கை சிறப்புப்பெற முகூர்த்தநாள் வைப்பது எப்படி?



நாள் செய்வதை நல்லோர் செய்யார் எனப் பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அதாவது நல்லவர்கள் செய்வதை விட நாள், நேரம் அதிக பலன் கொடுக்கும் என்ற கருத்தில் சொல்லப்படுவது இது.

அடுத்து திருமண லக்னத்தைப் பார்க்கிறோம். மணமகள் அல்லது மணமகன் லக்னத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரெண்டாமிடங்களாக முகூர்த்த லக்னங்கள் அமைவது சரியல்ல.

முகூர்த்த லக்னத்திற்கு நான்காமிடத்தில் குரு அமர்ந்திருந்தால் ஒரு இலட்சம் தோஷங்களை நிவர்த்தி செய்வதாக சொல்லப்படுகின்றது.

முகூர்த்த லக்னத்திற்கு நான்காமிடத்தில் சுக்ரன் அமர்ந்திருந்தால் 5000 தோஷங்களை நிவர்த்தி செய்வதாகச் சொல்லப்படுகின்றது.

முகூர்த்த லக்னத்திற்கு நான்காமிடத்தில் புதன் இருந்தால் 500 தோஷங்களை நிவர்த்தி செய்வதாக சொல்லப்படுகின்றது.

முகூர்த்த லக்னத்தில் குரு அமர்ந்திருந்தால் ஏனைய் இராசிகளில் அமர்ந்திருக்கும் கிரக தோஷங்கள் யாவும் நிவர்த்தியாகும் என்று சொல்லப்படுகின்றது.

இங்கே ஜோதிடர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள் சில உள்ளன.

முகூர்த்த லக்னத்திற்கு நான்காமிடம் குரு இருந்தால் ஒரு லட்சம் தோஷத்தை நிவர்த்தியாக்கும் என்று கூறப்பட்டுள்ளதை குரு அமர்ந்திருக்கும் இராசிக்கு தக்கவாறு பலனேற்படுத்த வேண்டும் ஜோதிடர்கள்.

மேட லக்னத்திற்கு நான்கிலுள்ள குரு உச்சமடைவதும் துலா லக்னத்திற்கு நான்கிலுள்ள குரு நீச்சமடைவதும் கருத்தில் கொண்டு சுக்ரன் புதனுக்கும் பலனேற்படுத்த வேண்டும்.

முகூர்த்த லக்னத்தில் குரு இருப்பதையும் அந்த இராசியில் குருவுக்குச் சொன்னவாறே சுக்ர, புதன் கிரகங்கள் அமர்ந்திருக்கும் லக்னம் அவரவர்களுக்கு அந்தந்த இராசியில் ஏற்படும் உச்ச ஆட்சி, நட்பு, பகை, நீச்சம் முதலிய ஸ்தான பலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

முகூர்த்த லக்னத்தில் சொல்லப்பட்ட குரு, சுக்ர-புதன் கிரகங்கள் இருந்தாலும் சூரியன் இருக்கும் லக்னம் உகந்தல்ல. சூரியனுடன் சேர்ந்த கிரகங்கள் அஸ்தங்க தோஷம் பெறுவதால் இத்தகைய லக்னத்தை விலக்கத் தான் வேண்டும்.

முகூர்த்த லக்னத்தில் சூரியன் இருந்தால் கணவன் சில வருடங்களில் மறைந்து மனைவி விதவைத்துவம் அடைவாள் என்கிறது ஜோதிட நூல்கள்.

முகூர்த்த லக்னத்தில் சந்திரன் இருந்தால் சில வருடங்களில் மிதமிஞ்சிய பாச பந்தத்தால் மனைவி, மறைவாள் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன.




முகூர்த்த லக்னத்தில் செவ்வாய் இருந்தால் இருவருடய வாழ்க்கையும் சில ஆண்டுகளில் பலவீனமடையும்.

முகூர்த்த லக்னத்தில் புதன் வீற்றிருந்தால் செல்வம் செழிக்கும். வாழ்க்கை வசதிகள் பல்வாறு பெருகும்.

முகூர்த்த லக்னத்தில் குரு அல்லது சுக்ரன் இருந்தால் கணவன்- மனைவி ஆயுள் விருத்தி ஏற்படும். வருமானம் குறைந்தாலும் குடும்பம் மகிழ்ச்சியாகவே இருந்து வரும். முகூர்த்த லக்னத்தில் சனி இருந்தால் குடும்பம் வறுமை, துன்பம் நிறைந்து காணப்படும். முகூர்த்த லக்னத்திற்கு 2,4,5,9,10,11 முதலிய இடங்களில் வளர்பிறைந் சந்திரன் வீற்றிருந்தால் சந்தோஷம், சந்தானம், சௌக்கியம், வெற்றியைக் கொடுத்து குடும்பம் எப்போதும் பசுமை நிறைந்து காணப்படும்.

மற்றும் கேந்திர திரிகோணங்களில் சுபக் கிரகங்கள் வீற்றிருக்கிற சந்திரன் இரண்டாமிடம் பெற மூன்று, ஆறு, பதினோராமிடங்களில் பாபக்கிரகங்கள் குடிகொள்ள ஏழாமிடத்தில் யாருமே இல்லாதிருக்க மணமகன், மணமகள் லக்னத் திற்கு முகூர்த்த லக்னம் 6,8,12 ஆம் இடத்தில் இல்லாது அமைந்தால் சகல சௌகரியங்களும் ஏற்பட்டுப் புத்திர பௌத்திராபிவிருத்தியும் ஏற்படும். முகூர்த்த லக்னத்திற்கு எட்டில் செவ்வாயும் ஆறில் சுக்ரனும் இல்லாமலிருக்க லக்னம் அமைதல் வேண்டும்.

எட்டில் செவ்வாய் ஆயுளைக் குறைக்கும். ஆறில் சுக்ரன் நீர் நோய்களையும் கூட ஏற்படுத்தலாம். முகூர்த்த லக்னத்திற்கு பதினோரமடத்தில் சூரியன் வீற்றிருந்தால் எல்லாவற்றிற்கும் நல்லது. பொதுவாக பதினோராமிடத்தில் நிற்கும் கிரகம் பாபக்கிரகமானால் நன்மைதான் செய்யும் என்று முகூர்த்த விதிகள் கூறுகின்றன.

திருமணம் நிச்சயம் செய்யும்போது மணமகள் வயதும் மணமகன் வயதும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

திருமண காலத்தில் மணமகனுக்கு ஒற்றிட்ட வயதும் மணமகளுக்கு இரட்டித்ததுமாக இருக்க வேண்டும்.

திருமண காலத்தில் விலக்க வேண்டிய மாதங்கள், நட்சத்திரங்கள், கிரணதோஷம், குரு சுக்ர- சம சப்தம லக்கினம், குரு சுக்ர அஸ்தமனத்திற்கு முன்னேழு பின்னேழு நாட்கள். இவர்கள் வக்ராஸ்தமனத்திற்கு மூன்று நாட்கள் முன்னும் பின்னும் முகூர்த்த லக்னம் வைப்பது விலக்கப்பட வேண்டும்.

மற்றும் பவம், பாலவம்,, கரசை, பத்திரை நீங்கிய காரணங்கள் இல்லாமல் பார்க்க வேண்டும்.

மலமாதம் என்பது இரண்டு அமாவாசை, இரண்டு பௌர்ணமி வரும் மாதமாகும்.

திருமண நாளுக்கு உகந்த நட்சத்திரங்கள்: ரோகிணி, மிருகசீரிடம், மகம், உத்தரம், அத்தம், சுவதி, அனுஷம் மூலம், உத்தராடம், திரு வோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி முதலியன முதல்தர நட்சத்திரங்களாகும்.

அஸ்வினி, புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம், முதலியன இரண்டாந்தர நட்சத்திரங்களாகும்.

துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, தியோதசி, முதலிய திதிகள் நல்லவைகளாகும்.

ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் முதலிய லக்னங்கள் திருமணத்திற்கு ஏற்ற லக்னங்களாகும்.

# அரசின் நீதி பரிபாலனத்தால் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது

இலங்கைத்தீவில் நடந்தேறியது போர்க் குற்றம் என்று அனைத்துலக மட்டத்தில் பரவலாக குறிப்பிடப்படுகின்றது. அங்கு நடந்தேறியது இனப்படுகொலை என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஸ்தவாங்கர் நகரில் கடந்த சனிக்கிழமை நாடு கடந்த தமிமீழ அரசாங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காணொளி ஊடாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் நீதி பரிபாலனத்தால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதையும் சுயாதீனமான விசாரணைக்கான சாத்தியக்கூறுகள் அங்கு இல்லை என்பதையும் ஐ.நா. மனித உரிமைக்குழுவும் தெரிந்து கொண்டுள்ளது.

இலங்கை அரச படைகள் தான் படுகொலைகளை மேற்கெண்டன என்பதை மூடி மறைத்து அரசியல்வாதிகளை காப்பாற்றுவதற்காக சிறிய அளவில் சில இடங்களில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பது போன்ற கருத்துக்களை இலங்கை அரசு வெளியிடுகின்றது. எனவே நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது பெரும் வெற்றியில்லாவிட்டாலும் எமக்கு கிடைத்திருக்கும் வெற்றியின் முதற்படியாகும். இத்தீர்மானம் இன்று உலகில் மாறிவரும் இராஜதந்திர உறவுகளை எடுத்துக் காட்டுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் குழு முற்று முழுதாக அறவழியில் செயற்படும் என்று கூறுவதற்கில்லை. நலன்சார் அரசியல் இராஜதந்திர நகர்வுகளிலேயே முடிவுகள் தங்கியுள்ளன.

பல்வேறு நாடுகளின் மக்கள் நீதிமன்றங்களில் இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்று நிரூபிப்பது முக்கியமானது என்றும் அதுவே ஐ.நா.வையும் உலகையும் ஏற்றுக்கொள்ள வைக்க உதவும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ-2)

## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

சீ.துர்க்காஜினி- 3ஏபி5சி, ச. கயல்விழி- 2ஏ4பி3சி, நா.சர்மிலா- 2ஏபி3சி2எஸ், த.நிரோஷன்-ஏ3பி4சிஎஸ் (அ)

# ஆயுள் தண்டனை சிறைக்கைதி பணக்காரன் ஆனது எங்ஙனம்?

(கொழும்பு)

வெலிக்கடைச்சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு புத்தாண்டு போனஸ் வழங்கியுள்ளார். மூவாயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையில் இவ்வாறு புத்தாண்டு போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரே இவ்வாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு போனஸ் வழங்கியுள்ளார்.

கடைநிலை உத்தியோகத்தர்களுக்கு மூவாயிரம் ரூபாவும் சிரேஸ்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவி அடிப்படையில் ஐயாயிரம் முதல் ஐம்பதாயிரம் ரூபா வரையில் போனஸாக வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் போதைப் பொருளை விற்பனை செய்வதற்கு இலஞ்சமாக இந்தப் பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் இவ்வாறு கைதிகளினால் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 104

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

சோவியத் யூனியனில் ஜேர்மனியர்களின் கொலை முகாம்களில் பட்டினியால் வாடிக்கொண்டு சாவை எதிர்நோக்கியிருக்கும் கைதிகள்



1-வது பைலோருஷ்ய சேனையில் சோவியத்துருப்புகளோடு இணைந்து 1-வது போலந்துப்படையும் தாக்குதலில் இறங்கியது. சோவியத் மற்றும் போலந்து துருப்புகளின் கூட்டு நடவடிக்கைகள் ஜேர்மனியப்பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திலும் போலந்தின் தேசிய சுதந்திரத்தை புனர்நாட்டுவதில் உள்ள நாட்டத்திலும் இரு நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு அடையாள்மாகாத் திகழ்ந்தன.

சோவியத் துருப்புகள் வீஸ்லாவை நெருங்கி வந்தபோது, லண்டனில் பதுங்கியிருந்த போலந்து பிற்போக்காளர்கள் தமது குறுகிய தன்னல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டவட்டமான நிலவரத்தைக் கவனத்திற்கொள்ளாது, சோவியத் படைத்தலைமைக்கு தெரிவிக்காமல் லுயூதோவா இராணுவத் தலைமையோடு பிரச்சினையைக் கலந்தாலோசிக்காது ஆகஸ்ட் 1 ஆம் திகதி வார்சாவில் எழுச்சியை மூட்டிவிட்டனர்.

இந்நேரத்தில் சோவியத் துருப்புகள் வார்சாவின் வலது கரைப்பகுதியின்-பிராக்-வாயில்களில் வீஸ்லாவில் இருந்த தாக்குமுனைகளை தக்கவைத்துக் கொள்வதற்காக கடும் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. முந்தைய சண்டைகளில் இவை பன்முறை முயன்றும் எதிரியின் போர்முனையைப் பிளந்துகொண்டு கிளர்ந்தெழுந்தவர்களுக்கு உதவுவதற்காக வரமுடியவில்லை. சோவியத் விமானப்படை மட்டுமே உதவின. ஆனால், பலத்தில் விஞ்சிநின்ற பாசிஸ்டுகள் எழுச்சியை கொடும் கரம்கொண்டு ஒடுக்கினர். (2 இலட்சம் பேர்கள் கொல்லப்பட்டனர்) நகரம் கிட்டத்தட்ட முழுமையாக அழிக்கப்பட்டது.

ஆகஸ்டில் 1-வது பைலோருஷ்ய ேனையின் துருப்புகள் வீஸ்லாவை அடைந்து எதிர்க்கரையிலிருந்த மாக்னுஷெவ் மற்றும் புலாவா பிரதேசங்களில் இரண்டு பெரிய தாக்குமுனைகளைக் கைப்பற்றின. எதிரிக்கு கணிசமான இழப்புகள் எற்பட்டன. பின்னால் வீஸ்லா- ஒதெர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

எதிரியின் சென்டர் படைத்தொகுதி முறியடிக்கப்பட்டதற்கு பெரும் இராணுவ- அரசியல் மற்றும் போர்த் தந்திர முக்கியத்துவம் இருந்தது. பைலோருஷ்ய சோவியத் சோஷலி ஷக் குடியரசு, லித்துவேனிய சோவியத் சோஷிசக் குடியரசின் பெரும்பகுதி நேச நாடாகிய போலந்தின் கிழக்குப் பகுதி முதலியன விடுவிக்கப்பட்டதானது இந்நட வடிக்கையின் முக்கிய விளைவாகும். சோவியத் துருப்புகள் நேமன் ஆற்றைக் கடந்து பாசிச ஜேர்மனியின் எல்லைகளை அணுகின.




ஜேர்மனியின் கொலைமுகாம்களில் கொலையுண்ட சோவியத்கைதிகள்


வான்மூலம் வீசிய தளவாடங்களும் மருந்துகளும் அடக்குமுறையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கிளர்சியாளர்களுக்கு சிறிதளவு

ஹிட்லர்துருப்புகளின் தற்காப்பில் பெரும் பிளவு தோன்றியது. பாசிஸ்டுகள் மேற்கேயிருந்து உடனடியாக பெரும் சக்திகளை (46 டிவிஷன்களையும் 4 பிரிகேடுகளையும்) இங்கே கொண்டுவரத் தொடங்கினர். இது பிரான்சில் நேச நாட்டவரின் தாக்குதலுக்கு உதவியது.

எதிரிக்கு இழப்பு ஏற்பட்டது. பல நேரங்களில் சண்டைகளில் கலந்து கொண்ட 97 டிவிஷன்கள், 13 பிரிகேடுகளில்17 டிவிஷன்களும் 3 பிரிகேடுகளும் முற்றுலுமாக அழிக்கப்பட்டன. 50 டிவிஷன்கள் தம்மிடமிருந்தோரில் பாதிக்கு மேற்பட்டோரை இழந்தன. சுமார் 2000 எதிரி விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.



சோவியத் படையினரால் கைது செய்யப்பட்ட ஜேர்மனியத்துருப்புகள்



ஜேர்மன் கைதிகளை கொண்டுசென்ற வீதிகளை சோவியத்நாட்டவர் நீரால் கழுவுகின்றனர்

பைலோருஷ்ய போர்த்தந்திர நடவடிக்கை அளவில் மிகப்பெரிய தாக இருந்தது. இதில் 4 சேனைகள் பங்கேற்றன. 1,100 கி.மீ. நீளமும் 600 கி.மீவரை ஆழமும் உடைய போர் முனையில் தாக்குதல் நடைபெற்றது.

பைலோருஷ்யாவில் பாசிச ஜேர்மனியத்துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது மேற்கொண்டு யுத்தத்தின் போக்கில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்த வல்லதாக அமைந்தது. பைலோருஷ்யாவில் செஞ்சேனை அடைந்த வெற்றி பாசிச ஜேர்மனியின் நிலை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென மதிப்பீடு செய்த பிரிட்டிஷ் பிதமர் வி.சர்ச்சில், “பொதுத் தோல்வி விரைவிலேயே வரும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் இருக்கவில்லை” என குறிப்பிட்டார்.

(தொடரும்)

# இந்தியாவின் எம்.பி.க்கள் குழுவினர் முள்ளிவாய்க்கால் செல்லவேண்டும்

## உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களை இந்திய எம்.பி.க்.கள் குழு பார்வையிட வேண்டும் என்று உலகத் தமிழர் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய எம்.பி.க்கள் குழுவுக்கு தலைமை வகிக்கும் சுஷ்மா சுவராஜ் மற்றும் எம்.பி.க்களுக்கு உலகத் தமிழர் இயக்கத்தின் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு, இலங்கையில் நடைபெற்ற போரில் 2 இலட்சத்து 16 ஆயிரம் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இலட்சக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். பல்லாயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். உள்நாட்டு போரினால் தமிழர்கள் வசிக்கும் வடகிழக்கு பகுதி முற்றாக அழிந்து போயுள்ளது.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என இந்தியா பல்வேறு வகையில் உதவிகளை செய்து வருகின்றது. 50 ஆயிரம் வீடு கட்டும் திட்டத்துக்கு உதவி , 52 ட்ரக்டர்கள், ஐம்பதாயிரம் மிதிவண்டிகள் இவை மட்டுமல்லாது பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.

அத்தோடு இலங்கை மற்றும் இந்திய அரசுகள் வெளியிடும் அறிக்கைகளில் வடகிழக்கு வாழ் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டும் வருகின்றது.

இந்தியா இத்தனை செய்தாலும் கூட சீனாவிடமிருந்தே அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான உதவிகளையும் இலங்கை பெற்று வருவது என்பது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது என்பதை சுட்டிக்காட்டுகின்றோம். இந்த நிலையில் இந்திய எம்.பி.க்கள் குழு இலங்கைக்கு செல்கிறது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் முழுமையாக இராணுவ மயமாக்கப் பட்டுள்ளது. முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், சம்பூர், வாகரை என போரினால் தமிழர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இந்திய எம்.பி.க்கள் குழு செல்லுமேயானால் நிச்சயம் நாம் வரவேற்போம்.

மேலும் மன்னார், மட்டக்களப்பு பாதிரியார்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் மாணவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களையும் இந்திய எம்.பி.க்கள் குழு கண்டிப்பாக சந்திக்க வேண்டும் என்றுள்ளது. (அ-2)

## நில்வள கங்கை முதலை யால சரணாலயத்தில்

வனவள பாதுகாப்பு அதிகாரிகளினால் மாத்தறை நில்வள கங்கையில் வைத்து பிடிக்கப்பட்ட முதலை யால சரணாலயத்தில் விடுவிக்கப்பட்டதாக வனவள பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் எச்.டி.இரத்நாயக்க கூறியுள்ளார். இதனை தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் வைப்பதற்கு திட்டமிடப்பட்ட போதும் மிருகக்காட்சிச் சாலை நிர்வாகம் அதனை நிராகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி அண்மையில் 12 அடி நீளமான முதலையொன்று பிடிபட்டது. இன்னும் இரு தினங்களுக்கு முதலை பிடிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதோடு ஆட்கொல்லி முதலை இன்னும் பிடிபடவில்லை என உறுதியானால் மீண்டும் முதலை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கைக்கு கொண்டு வரப்படும் வாகனங்கள் அனைத்தையும் மே மாதம் 31 ஆம் திகதி முதல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கூடாக இறக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் மாற்றம் எதுவுமில்லை என இலங்கைத் துறைமுக அதிகார சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் வாகனங்களை இறக்குவதற்கான பிரத்தியேக நிலையம் மற்றும் வாகனங்களை களஞ்சிப்படுத்துவதற்கான இடப்பாற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்கள் நீண்ட தாமதத்தை எதிர்நோக்குவதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சரக்கு கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதனால் இறக்குமதியாளர்கள் அதிக சரக்கு கட்டண சுமையை எதிர்கொள்வதாகவும் துறைமுக அதிகார சபையின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# வெப்பகாலத்தில் மூலிகைப்பயன்பாடு





திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

*வெப்ப காலத்தில் ஆரோக்கியத்திற்கு கரட்சாறும் பசளைக்கீரை சாற்றையும் ஒவ்வொன்றும் 30 மில்லிய அளவு கலந்து தினமும் காலையில் அருந்த வேண்டும். உடலிற்கு குளிர்ச்சியையும் நீர்த்தன்மையையும் சேர்ப்பது மட்டுமின்றி கரட்டில் தோல் மற்றும் கண்களுக்கு நலம் தரும் உயிர்ச்சத்து ஏ இருக்கின்றது: பி வகை உயிர்ச்சத்துக்கள் நரம்பு மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பசளைக்கீரையின் அதிக அளவிள்ள மகனீசியம், உயிர்ச்சத்து சி இரத்தக்குழாய்களை நன்கு பராமரிக்கக் கூடியது, தயாரித்த சாறை உடனே அருந்த வேண்டும்.

* நம் உணவில் ஆறுசுவைக்கு பதில் கசப்புக்குரிய உணவுவகைகளை கலந்துண்ணாமல் தினமும் மீதமுள்ள காரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு ஆகிய சுவைகளையுடைய உணவு வகைகளை மட்டுமே சாப்பிட்டு வருகின்றோமல்லவா? இதனால் உடலில் தேய்மானங்களை புதுப்பிக்க உற்பத்தியாகும் கலவை தரமற்றதாக உற்பத்தியாகின்றது.

இந்த தரக்குறைவுக் கலவை தேய்ந்த பாகங்களில் முழுமையாகவும் உறுதியாகவும் படியாமல் போய்விடுகின்றபடியால் படிப்படியாக தேய்மானங்கள் உடலில் அதிகமாகி உடலுறுப்புக்கள் அதனதன்பலத்தை (Strength) இழக்கவாய்ப் புண்டாகி விடுவதால் தளர்ச்சியடைகின்றது உடல்.

ஆகவே இறுதிவரை மனித உடம்பு தளர்ச்சியடையாமல் முழுச்சக்தியுடனும் தன்னிச்சையாகவும் நோயின்றி வாழ வேண்டுமெனில் அனுதினமும் ஒரு வேளை உணவிலாவது கசப்புச் சுவைக்குரிய காய்கறி, கீரை வகைகளை உணவுடன் சேர்த்து மென்று சுவைத்து விழுங்கிவர வேண்டும். உதாரணமாக அகத்திக்கீரை, பாகற்காய், சுண்டைக்காய், காற்றோட்டிக்காய் ஆகியவை கசப்புக்குரியன.

*வெப்ப காலத்தில் வேப்பம்பூ வடகத்தை உப்புக்கலந்து மோரில் ஊற வைத்து நெய்யில் பொரித்து சாப்பிடலாம். பித்தமும் குறையும்.

*எலுமிச்சம்பழம், சீரகம், இலந்தைப் பழம், பசுநெய், கரும்பு, செவ்விளநீர், நெல்லிக்காய், கத்தரிப்பிஞ்சு, பனை வெல்லம் வெப்பத்தை தணிக்கும் பொருட்களாகும்.

*கற்றாளையின் உள்சோற்றை சிறு துண்டாக வெட்டி ஏழு தரம் கழுவி கற்கண்டு தூளிட்டு சாப்பிட கண், கை, காலிலுள்ள எரிச்சல் நீங்கும். மலச்சிக்கலை நீக்குவதில் முதன்மையானது.

*பித்தாதிக்கதால் ஏற்படும் தலைச்சுற்று நீங்க இஞ்சிச்சாறு 20 மில்லியுடன் தேன் 20 மில்லி கலந்து காலையில் அருந்த வேண்டும். தினமும் பாலில் ஏலக்காய் சேர்த்துச் சாப்பிட உடல் உஷ்ணம் தணியும்.

*2, 3 பேரீச்சம் பழங்களை வெப்ப காலத்தில் தினமும் சாப்பிட்டு ஒரு டம்ளர் இளஞ்சூடான பசுவின் பாலை இரவில் குடிக்கவும் இரத்தம் சுத்தியாவதுடன் நல்ல தூக்கமும் வரும்.

* வெள்ளரிப் பழத்திற்கு சர்க்கரை சேர்த்து சாப்பிட உடல் உஷ்ணம் தணியும் குளிர்ச்சியைத் தரும். மலச்சிக்கலை நீக்கும்.

*தண்ணீர் விட்டான் கிழக்கின் சாறு 30 மில்லியை பசுப்பாலில் 200 மில்லியில் விட்டுக்காய்ச்சி காலையில் அருந்தி வந்தால் உடற்சூடு தணிவதுடன் பெண்களிற்கு ஏற்படும் வெள்ளை சாய்தலும் நீங்கும்.

*வெப்ப காலத்தில் கோப்பி, தேநீருக்கு பதிலாக சீரக்குத்தூள் பயன்படுத்தி சீரகக் குடிநீர் செய்த பால் சர்க்கரை அல்லது சீனி கலந்து சாப்பிடலாம்.

*பழையசாதத்தில் மோர் அல்லது புளிக்காத தயிர் சேர்த்து சாப்பிடலாம்.

* உள்ளியை உரித்து சிறு சிறு துண்டுகளாக்கி நறுக்கி நெய்யில் வறுத்து 5 கிராம் அளவு சிறிது பனைவெல்லம் சேர்த்து காலையில் வாரத்தில் 2 அல்லது 3 நாட்கள் சாப்பிடலாம்.

* வெப்ப காலத்தில் அறுகம்புல்சாறு 500 மில்லியை நல்லெண்ணெய் 500 மில்லியில் சேர்த்துக்காய்ச்சி ஆறிய பின்பு உச்சி முதல் உள்ளங்கால் வரைத் தோய்த்துக் குளிக்க உடல் உஷ்ணம் தணித்து தோல் நோய்களும் வராது.

* வெப்பபகாலத்தில் நன்னாரி வேர்,அல்லது வெட்டிவேரைத் தண்ணிரில் ஊறவைத்து குடிக்க தாகம், உடல் சூடு தணியும்.

*ஆரைக்கீரையை நிழலில் உலர்த்தி பொடித்து அதில் 4 கிராம் அளவு பசும்பால் 100 மில்லியில் கலந்து சீனி சேர்த்து இரவில் அருந்தலாம்.

*நெற்பொரியை தண்ணீர் விட்டுக் காய்ச்சி தெளிவைக் குடிக்கலாம்.

எனவே பருவகால வேறுபாடுகளுக்கமைய உணவுமுறை,பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் மூலிகைப் பாவனையையும் ஆரோக்கியமாக பயன் படுத்தினால் சுகவாழ்வு பெறலாம்.





# ஈழம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

## ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

ஈழக் கோரிக்கை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஒபாமாவுக்கான தமிழர்கள் என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் 31 ஆயிரம் போலி கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை அந்த அமைப்பு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்ஸ் போ ஒபாமா அமைப்பு பிரதிநிதிகள் இரகசியமான முறையில் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபோர்ட் ஓ பிளேக்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்த மகஜர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் துருக்கி பிரிவினைவாதிகளும் தமிழர் அல்லாதோரும் கையொப்பமிட்டுள்ளனர். இலங்கை இராணுவம் 70 ஆயிரம் தமிழ் பொதுமக்களை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சூடானை போன்றே இலங்கையில் ஈழ இராச்சியம் அமைக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அமெரிக்காவிடம் ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# மேர்வினுக்கு எதிரான விசாரணைகள் இடைநடுவில் கைவிடப்படலாம்

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிரான விசாரணைகள் இடைநடுவில் கைவிடப்படக்கூடுமென சிங்கள இணைய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சர் ஒருவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அமைச்சருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உறுப்பினர்கள் விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டுமென முயற்சித்த போதிலும் சில தரப்பினர் விசாரணைகளை தடுக்க முயற்சிக்கப்படுகின்றது.

அமைச்சரும் அவரது சகாக்களும் கப்பம் கோரல் உள்ளிட்ட குற்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாக களனி பிரதேச சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சமாதானம் பற்றி உரையாற்ற சுப்ரமணிய சுவாமிக்கு அழைப்பு

(கொழும்பு)

சமாதானம் பற்றி உரையாற்றுவதற்காக இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமிக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பில் விரிவுரையாற்றுமாறு இராணுவத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பாதுகாப்பு கருத்தரங்கில் சமாதானம் பற்றி விரைவுரையாற்றுமாறு இலங்கை இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய சுப்ரமணியம் சுவாமியிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் எழுத்து மூலமான அழைப்பு ஒன்று சுப்ரமணியம் சுவாமிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் சுப்ரமணியம் சுவாமி அழைப்பை ஏற்றுக் கொண்டாரா, இலங்கையில் உரையாற்றுவாரா என்பது பற்றி தகவல்கள் வெளியாகவில்லை. (அ-2)

# போலிப் பெயர்களை பயன்படுத்துவோர் பற்றி புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

போலிப் பெயர்களைப் பயன்படுத்தி வரும் இலங்கையர்கள் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவ்வாறு போலிப் பெயர்களுடன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள், வடக்கு ஆயுதக் குழுக்கள் மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இவ்வாறு வேறும் பெயர்களைப் பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஐரோப்பா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகளில் போலிப் பெயர்களுடைய இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் போலிப் பெயர்களைப் பயன்படுத்தி வாழ்ந்து வருகின்றனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய நபர்கள் இவ்வாறு போலிப் பெயர்களைப் பயன்படுத்தி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு போலிப் பெயர்களை பயன்படுத்தி வாழ்ந்து வரும் நபர்கள் பற்றிய தகவல்களை திரட்டி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (அ-2)




★ 1025-போலெஸ்லாவ் குரோப்றி போலந்தின் முதல் மன்னனாக முடி சூடினான்.

★ 1797-நியுவியெட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை வென்றனர்.

★ 1835-அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.

★ 1880-மிசூரியில் வீசிய புயல் காற்றினால் 99 பேர் உயிரிழந்தனர்.

★ 1906-அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் நகரில் 3 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1909-ஜோன் ஆஃப் ஆர்க் பத்தாம் பயஸ் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டாள்.

★ 1912-கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூயோர்க் வந்து சேர்ந்தனர்.

★ 1930-பிபிசி வானொலி தனது வழமையான செய்தி அறிக்கையில் இந்நாளில் எந்த செய்திகளும் இல்லை என அறிவித்தது.

★ 1941-ஜேர்மனியப் படைகள் ஏதென்சை நெருங்கும் போது கிறீஸ் பிரதமர் அலெக்சாண்ட்ரொஸ் கொரிசிஸ் தற்கொலை செய்து கொண்டார்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: டோக்கியோ நகர் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹெலிகோலாந்து என்ற சிறு தீவின் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

★ 1949-அயர்லாந்து குடியரசு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

★ 1954-கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1958-இலங்கையில் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவடைந்தது.

★ 1980-சிம்பாப்வே குடியரசு (முன்னாள் ரொடீசியா) அமைக்கப்பட்டது. கனான் பனானா அதன் முதல் ஜனாதிபதியானார்.

★ 1983-லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 63 பேர் உயிரிழந்தனர்.

★ 1993-பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இசாக் கான் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரரவையைக் கலைத்தார்.

★ 1996-லெபனானில் ஐ.நா. கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 106 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1905-ஜார்ஜ் எச் ஹிட்சிங்கஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1998)

★ 1940-ஜோசப் கோல்ட்ஸ்டெயின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★ 1976-ஹென்ட்றிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)

★ 1955-ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (பி.1879)

### சிறப்பு நாள்

★ சிம்பாப்வே -சுதந்திர தினம் (1980)



★ 1858-ஈழத்து எழுத்தாளரும் பதிப்பாளருமான ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் பிறந்த தினம் (இ.1917)

# கட்டாய அடையாள கரைப்புக்கு ஒரு இனத்தை நிர்ப்பந்திக்க முடியாது



யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் அதன் பின்னரும் பெரிதாகப் பேசப்பட்ட விடயம் 13-வது திருத்தத்திற்கு அப்பால் என்பதாகும். ஈழம் தவிர்ந்த எதுவும் தருவோம் என்று அரசுத் தலைமைகள் ஆசை காட்டிய காலம் அது. விடுதலைப் புலிகள் மட்டும் தடையாக இல்லாவிட்டால் எப்போதோ பிரச்சினை தீர்ந்துவிடும் என்றவாறாகப் பேசப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் இந்தச் சித்மரிப்போடு இந்திய அரசும் ஒத்தூதிக் கொண்டிருந்தது. சர்வதேசச் சமூகம் அந்த நேரத்தில் அரசியல் தீர்வின் வடிவம் பற்றி எவ்வித கருத்தும் வெளியிட்டிருக்கவில்லை என்றாலும் கௌரவமான தீர்வு, சகலருக்கும் ஏற்புடையதான தீர்வு, சகலரதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வு என்றவாறான சொற்றொடர் பிரயோகத்தினால் தற்காப்புச் செய்து கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகள் இல்லாத இன்றைய நிலையில் மீண்டும் பேச்சு வார்த்தை, நிபுணர் குழுக்கள், தெரிவுக் குழுக்கள், அனைத்துக் கட்சி மாநாடு என்றெல்லாம் பழைய பல்லவியையே அரசாங்கம் திரும்பவும் மீட்டத் தொடங்கியிருப்பதைப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் தான் உண்மையான பிரச்சினையா என்ற வினா எல்லோர் மனதிலும் இப்போது நிச்சயம் எழவே செய்யும். இலங்கைக்குப் பொருத்தமான தீர்வுத்திட்டம் என்ன என்பது தொடர்பில் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கூட்டங்கள் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றுக்கென கோடிக்கணக்கான ரூபாய்களைச் சர்வதேச சமூகமே கொட்டித் தீர்த்திருக்கிறது. ஆனால், இறுதியில் பூஜ்ஜியமே ஐந்தொகையாயிற்று.

13-வது திருத்தம் பற்றி கடந்த 25 வருடங்

**பொங்கு தமிழ்**

களாக எழுதியும் பேசியும் களைத்தாகிவிட்டது. இதில் புதிய கண்டுபிடிப்புக்களை செய்ய வேண்டிய அவசியம் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. சுருக்கமாகச் சொன்னால், இது ஒற்றை ஆட்சி முறைமையின் கீழ் செய்யப்படக்கூடிய அதிகாரப்பரவலாக்கல். இதுவே அதிகூடிய அதிகாரப் பரவலாக்கலுமல்ல. விடுதலைப்புலிகள் மட்டுமின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி கூட அந்த நேரத்தில் இதனை ஏற்றிருக்கவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையின் ஆரம்பமே ஒற்றையாட்சி முறைமையினை தமிழ் மக்கள் நிராகரித்தமையுடன் ஆரம்பமாயிற்று. அந்த முறையினை ஏற்றுக்கொண்டவர்களைத் தமிழர்கள் தங்கள் பிரதிநிதிகளாக ஒருபோதும் கருதியதுமில்லை. அங்ஙனமிருக்கையில் 13-வதுதிருத்தம் என்பது வடக்கு- கிழக்கு இணைப்பு என்ற துருப்புச் சீட்டோடு முன்வைக்கப்பட்டது. ஆயுதப்போராட்டத்தைக் கைவிடுவதற்கான ஆரம்பப்புள்ளியாகவும், இந்தியா தனது செல்வாக்கினை இலங்கைமீது நெறிமுறையான வகையில் தொடர்ந்தும் கொண்டிருப்பதற்குப் பயன் படும் விதத்திலும் மாகாண சபைகள் அறிமுகமாயின. இவ்விடத்தில் இரண்டு அரசுகளுமே நேர்மையுடன் செயற்பட்டதாகக் கூற முடியாது. ஆயினும் அந்த நேர்மையீனங்களுக்கு விடுதலைப்புலிகள் சாட்டாகப்போய்விட்டார்கள்.

ஆனாலும், ஒற்றையாட்சி முறைமைக்குள்ளேயே தமிழர்கள் தீர்வுகாண வேண்டும் என்று இந்தியா வெளிப்படையாக ஒரு போதுமே கூறியதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். சட்ட வாசகத்தைப் பயன்படுத்துவதானால், இறைமை பாதிக்கப்படாத வகையிலும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்குப் பங்கமில்லாத விதத்திலும் தீர்வு காணப்படவேண்டும் என்றே இந்தியாவும் ஏனைய நாடுகளும் கூறி வந்துள்ளன. அரசுகளின் நிலைப்பாடு என்றளவில் இதனை விளங்கிக்கொள்வதில் சிரமமிருக்காது. ஆனால், இது ஒற்றையாட்சி முறைமைக்குள்ளான தீர்வு என்று பொருள்பட வேண்டிய அவசியமுமில்லை.

இலங்கை பெரும்பான்மையின மக்களின் கைகளில் ஆட்சியதிகாரம் வந்ததிலிருந்தே ஒற்றையாட்சி முறைமை என்பது சிங்கள-பௌத்த அடையாளத்துடன் பின்னிப் பிணைந்ததாகிவிட்டது. இதில் அவர்கள் மிக வெளிப்படையாகவே உள்ளார்கள். காணி, பொலிஸ் அதிகாரம் என்பன பரவலாக்கப்படல் என்பதில் காட்டப்படும் எதிரிப்புக்கூட தங்களுடைய இந்த அடையாளம் பாதிக்கபடலாம் என்ற அவர்களது அச்சத்தின் வெளிப்பாடாகவே விளங்கிக்கொள்ளப்படலாம். இந்த அதிகாரங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடானது ஒற்றையாட்சி முறைமைக்குள்ளும் எந்தளவு அதிகாரப்பரவலாக்கத்துக்கு அரசு தயாராக உள்ளது என்பதையே கோடுகாட்டுகின்றது.

மறுபுறத்தில் தமிழ்மக்கள் தமது இருப்புக்கும் அடையாளப் பேணலுக்கும் ஒற்றையாட்சி முறைமை நேரெதிரானது என்றே கருதி வந்தார்கள். ஏந்தவொரு கால கட்டத்திலும் எத்தகைய நிர்ப்பந்தத்தின் கீழும் இதில் விட்டுக் கொடுப்பைச் செய்ய விடாப்பிடியாக மறுத்தும் வந்துள்ளார்கள். ஆயினும் தமிழ் பேசும் மக்கள் என்றளவில் வரிக்கப்பட்ட ஒற்றையாட்சி முறைமை மறுப்பானது பின்னர் தமிழர் மட்டத்தில் மட்டும் என்றவாறாகக் குறுகிப்போய்விட்டது துரதிர்ஷ்டமே. இன்றுவரை இந்நாட்டு முஸ்லிம் தலைமைகள் இது பற்றிய ஒரு தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படையாக எடுக்காமலிருப்பதற்கான காரணங்கள் ஜனாதிபதி ஆட்சி முறைமையின் பலத்தின் பகிரங்க வெளிப்பாடே.

ஆக, மொத்தத்தில், கடந்த 65 வருட கால அரசியல் வரலாற்றில் பெரும்பான்மையினம் ஒற்றையாட்சி முறைமை தவிர்ந்த எதனையும் கருத்திலெடுக்க விடாப்பிடியாக மறுத்து வருகையில், தமிழ் மக்களோ அம்முறைமையை நிராகரிப்பதில் எவ்வித விட்டுக்கொடுப்பையும் செய்யத் தயாராக இல்லை என்பதைப் பட்டவர்த்தனமாக்கி உள்ளார்கள். இருதரப்பிலும் இதற்கான விலை செலுத்தப்பட்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் யாருடைய நிலைப்பாடு நியாயத்தின் பாற்பட்டது என்பதைத் தீர்மானிப்பதற்கான வாய்ப்பே தற்போது சர்வதேச சமூகத்திற்குக் கிட்டியுள்ளது. விடுதலைப்புலிகள் இருக்கையில், எந்தத் தீர்வுக்கும் தயார் என்றவர்கள் தற்போது ஒற்றையாட்சி முறைமையைத் திரும்பவும் முன்தள்ளினால், தீர்வுக்குத் தடையாக இருந்தது உண்மையிலேயே விடுதலைப்புலிகள் தானா அல்லது அரசின் விருப்பின்மையும் இயலாமையுமா என்பதைச் சர்வதேச சமூகம் தாராளமாகக் கவனத்திலெடுப்பதற்கான வாய்ப்பும் கனிந்துள்ளது.

ஆகவே, 13-வது திருத்தத்திற்கப்பால் என்பதன் பொருள் ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வே என்றால், விடுதலைப்புலிகள் மட்டுமல்ல தமிழரசுக்கட்சி தோன்றியதற்கே நியாயமில்லாமற்போய்விடும். ஆழமாகப் பிளவுபட்டுள்ள இலங்கை அரசியற் சமூகத்தைப் பொறுத்தளவில் எல்லாவிதத்திலும் ஒரே அடையாளத்திற்குள் கரைந்து போய்விடுவதற்கும் தமிழ் மக்கள் தயாரில்லை என்பதே 65 வருட கால மறுப்பின் முக்கிய பரிமாணம் என்பதையும் அத்தகைய கட்டாய அடையாளக் கரைப்புக்கு ஓர் இனத்தை நிர்ப்பந்திக்க முடியாது என்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளாமலில்லை. நடப்பதை அவதானிக்காமலுமில்லை.

பேச்சுவார்த்தை மேசைக்குப் போவதால் மட்டும் இந்த யதார்த்தம் பொய்யாகிப் போய்விடாது.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில்தான், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாம் நோக்க வேண்டும். இத்தகைய ஓர் ஆணைக்குழு, ஆட்சி மாற்றம் ஒன்று நாட்டில் ஏற்பட்டதன் பின்னர் நியமிக்கப்பட்டு கடந்த காலச் செயற்பாடுகளை விசாரித்து பரிந்துரைகளை மேற்கொண்டிருந்தால் அவற்றின் நியாயப்பாடுகளைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால், மிகவும் சர்ச்சைக்குரிய விதத்தில் நடாத்தி முடிக்கப்பட்ட யுத்தம் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழுந்த வேளையில் அதனை நடாத்தி முடித்த அரசாங்கமே விசாரணை ஆணைக்குழுவை நியமித்தால் அது எதனை விசாரிக்கமுடியும் என்பதற்கு வேறு ஆதாரங்கள் தேவைப்படாது.

உள்நாட்டுப் பொறிமுறை என்பதன் பொருள் அரசாங்கம் தனக்குத் தானே நினைத்தபடி விசாரணைக்குழுக்களை அமைப்பதல்ல. அவற்றின் ஏற்புடமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்தொருமையுடன் அவை நியமிக்கப்பட்டவையாகவும் இருந்திருக்க வேண்டும். வழக்கம் போலவே, கஞ்சிக்குப் பயறு போடும் நியமனங்கள் மூலம் கண்ணாமூச்சி காட்டுவது இதுவே முதற் தடவையுமல்ல.

எனவே, பரிந்துரைகளின் குறை நிறைகளை ஒவ்வொன்றாக ஆராய்வது பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தளவில் பிரயோசனமற்றதே என்றாலும் நியாயம் வேண்டி நிற்போர் சில விடயங்களைக் கவனத்தில் கொண்டுள்ளனர் என்பது இந்தத் நியமனத்தால் ஏற்பட்ட ஒரேஒரு சாதகமான பெறுபேறாக உள்ளது.

அதாவது, எந்த முக்கிய காரணத்துக்காக விசாரணை தேவைப்பட்டதோ அந்த விடயத்தில் ஆணைக்குழுவானது, அரசாங்கத்தில் தவறு காண முற்படவில்லை. மாறாக, நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியற் செயற்பாடுகளின் தேவைப்பாடுகள் பற்றி விரிவான பரிந்துரைகளைச் செய்திருப்பதன் நோக்கம் திசை திருப்பும் நடவடிக்கை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சர்வதேச சமூகம் அக்கறை கொண்டுள்ள விடயத்தில் அரசாங்கத்திற்கு நற்சான்று வழங்கிவிட்டு அரசியல் விடயத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறுதல் அதே அரசாங்கத்துக்கு கால அவகாசம் பெற்றுக் கொடுக்கும் கெட்டித்தனமான முயற்சி என்பதை உரியவர்கள் உரியவாறு அறிந்து கொண்டதன் விளைவே ஜெனீவாக் களம் திறக்கப்படக் காரணமாயிற்று.

தானே பின்னிய வலையில் வலிந்து சிக்கிய சிலந்தியாக அரசங்கம் தற்போது தடுமாறுகின்றது. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கியாயிற்று, எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்த மாட்டோம், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் கட்டாயம் அரசாங்கத்துக்குக் கிடையாது. உலகில் எந்தவொரு அரசாங்கமும் அங்ஙனம் செய்ததும் கிடையாது என்று அரசாங்கம் பல்குரல் பீரங்கியினூடாக வலையிலிருந்து மீண்டுவரப் படாதபாடுபடுகிறது.

ஆக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தல் என்பது இலங்கை அரசாங்கங்கள் கடந்த காலங்களில் முயற்சித்ததைப் போன்ற ஒருப்படையாக முனைப்பாக அன்றி இருப்படையான செயற்பாடாக அமையவேண்டும் என்பதற்கே ஜெனீவாக் களம் வழி சமைத்துள்ளமை எனலாம்.

சில விடயங்களில் விருப்பின்மையும் இயலாமையும் என்பது ஓர் அரசின் நெறிமுறைத் தன்மைமீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உள்நாட்டில் இதுவரை உணரப்பட்டிருக்காவிட்டாலும், தற்போது சர்வதேச அரங்கில் அதற்கான நிர்ப்பந்தமொன்று ஏற்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் 19-வது அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானம் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட்டபோது இலங்கைக் குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமர சிங்க ஆற்றிய பதிலுரை பல விடயங்களைச் சொல்லாமற் சொல்லிற்று. யாருடைய வரைபாக அந்த உரை இருந்ததோ தெரியவில்லை. ஆனாலும், அமைச்சரின் உரை தேசாபிமானிகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் தாவிது- கோலியாத் பாணியிலமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. பொதுவாக, இராஜரீக மட்டத்தில் பாவிக்கப்படும் வார்த்தைப் பிரயோகங்களாக அல்லாமல் சவால் விடும் தொனியிலும் மற்றவர்கள் மீது குற்றங்கண்டுபிடிக்கும் பாணியிலும் சில வார்த்தைகள் அமைச்சரால் பாவிக்கப்பட்டன. எந்தக்கருத்தில் உண்மையில் அவை பாவிக்கப்பட்டிருப்பினும், தேசாபிமானிகள் நிச்சயம் திருப்திப்பட்டிருப்பார்கள்.

*"கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியவேண்டாம்," "இலங்கைத் தாயின் இறைமையும் ஒருமைப்பாடும்," "மருத்து வர்கள் முதலில் தங்களைக் குணப்படுத்திக் கொள்ளவேண்டும்"* போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தீர்மானத்தை முன்மொழிந்த அமெரிக்காவையும் அதற்குக் கூட்டு ஆதரவளித்த மேற்கத்தைய நாடுகளையும் குறிவைத்துப் பிரயோகிக்கப்பட்டன. இத்தகைய வார்த்தைகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் பாவிக்கப்பட்டிருந்தால் நோக்கம் விளங்கிக்கொள்ளப்பட்டிருக்க முடியும். ஆனால், ஐ.நா.வின் அரங்கொன்றில் அரசுப்பிரதிநிதி ஒருவர் இங்ஙனம் உரையில் குறிப்பிடுதல் என்பது விடயத்தின் பாரதூரத்தன்மையினையும் இயலாமையின் விரக்தியினையும் வெளிக்கொணர்வதாக இருந்தது.

இலங்கை பல்லினத்தன்மை கொண்ட நாடு என்பதை தனது உரையில் அடிக்கடி குறிப்பிட்ட அமைச்சர் அந்தப் பல்லினத்தன்மை எந்த விதத்தில் அல்லது வடிவில் நிறுவன ரீதியாக நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை ஓரிடத்தில் கூடக்குறிப்பிட்டுக்கூற முடியவில்லை. அத்தகைய பல்லினத்தன்மையை மறுதலிக்கும் வகையில் அடுத்தடுத்து ஏற்பட்ட வன்முறைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அவரால் எதுவும் கூற முடியவில்லை. குறிப்பிட்ட ஓரின மக்கள் மட்டுமே புலம்பெயர்ந்தவர்களாக மாற வேண்டியேற்பட்ட சூழ்நிலைகள் என்ன? அவற்றை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றெல்லாம் கூறமுடியாத அமைச்சர் இயலாமையினால் பாவித்த சொற்றொடர்களாகவே மேலுள்ளவற்றை நம்மால் பார்க்க முடிகிறது.

மனித உரிமைகள் பேரவையின் முன்னைய அமர்வுகளின் போதும் இலங்கை அரசுப் பிரதிநிதிகள் நாட்டின் பல்லினத் தன்மை பற்றிக் குறிப்பிடத்தறுவதில்லை. ஆனால், அத்தகைய பல்லினக்குழுக்கள் தமது இருப்பைப் பேணுவதற்கான ஏற்பாடுகள் நாட்டின் எந்தச் சட்டத்திலாவது எங்கேயொரு மூலையிலாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. பல்லினத்தன்மை பற்றிச் சர்வதேச அரங்கில் பேசிக்கொண்டு அதே நேரத்தில் பன்மைத்துவத்தைச் சிதைக்கும் முயற்சிகளில் நேரடியாகவும் மறைமுகமாக வும் தீவிரமாக ஈடுபடுதல் என்பது இனிமேலும் கவனத்தில் எட்டாது போய்விடாது என்பதற்கு ஜெனீவாவின் அடுத்தடுத்த அமர்வுகள் சாட்சியாகலாம்.

தீர்மானத்தின் மூன்றாம் பந்தியில் பாவிக்கப்பட்டிருக்கும் இலங்கை அரசுடனான கலந்தாலோசிப்புடனும் சம்மதத்துடனும் என்ற சொற்றொடர் இந்திய அரசாங்கத்தின் முயற்சியினால் உள்ளடக்கப்பட்டதே ஆயினும் அதன் உள்ளார்ந்த விளக்கம் சம்பந்தப்பட்ட மூன்று அரசுகளுக்கும் நன்றாகவே தெரிந்த ஒன்றாகும். சாதாரணமாக மக்கள் விளங்கிக் கொள்வதற்கும் மனித உரிமைகள்சட்ட வாதிகள் இதனை விளங்கிக்கொள்வதற்கும் இடையில் வேறுபாடுண்டு.

உள்நாட்டுப் பிரச்சினைகள் தொடர்ந்தும் உள்நாட்டுப்பிரச்சினைகளாக இருக்கப் போவதில்லை என்பதையும் அப்படிக் கூறிக் காலம் கடத்துவது இனிமேலும் சாத்தியப்படாது. இது விடயத்தில் அரசு தனது நிஜ மான விருப்பையும் இயலுமையையும் வெளிக்காட்டுவதே அதற்குள்ள ஒரேயொரு தெரிவாக தற்போது இருக்கின்றது.



# சிறுவர் அரங்கம்

74

## பொன்னாக்கும் வித்தை

சந்திரன் அவனுடைய பெற்றோருக்கு ஒரே பிள்ளை! அவனுடைய தந்தை ராமராஜன் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். வியாபாரத்தில் ஒரு முறை பெரிய நஷ்டம் ஏற்பட அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் ராமராஜன் இறந்து போனார். அவனுடைய தாய் பார்கவி தங்கள் வீடு , நிலபுலன்கள் யாவையும் விற்றுக் கடனீன அடைத்தாள். அதன்



பின் ஒரு குடிசையமைத்து அதில் தன் பிள்ளையுடன் வசிக்கத் தொடங்கினாள். பார்கவி வயிற்றுப்பிழைப்புக்காகப் பல வீடுகளில் வேலை செய்யத் தொடங்கினாள்.

அந்த நிலையிலும் தன் பிள்ளையை ஒழுங்காக வளர்க்க எண்ணிய அவள் சந்திரனை ஓர் அரசுப் பள்ளியில் சேர்த்தாள். தொடக்கத்தில் சந்திரனும் ஒழுங்காகப் படித்தான். ஆனால் அவன் பெரியவனாகி பதினைந்து பிராயத்தை எட்டிய போது தங்கள் குடும்பத்தின் ஏழ்மை அவன் மனத்தை உறுத்த ஆரம்பித்தது. கிராமத்தில் மற்ற பணக்காரர்களைக் காணும் போது தானும் அவர்களைப் போல் ஆக ஆசைப்பட்டான். ஆனால் பள்ளியில்



படித்து முடித்து ஒரு சாதாரண வேலையில் சேர்ந்தால் தன் ஆசை நிறைவேறாது என்றும் உணர்ந்தான்.

ஒரு நாள் இரும்பைத் தங்கமாக்க முடியும் என்றும் அந்த ரகசிய வித்தை சாமியார்களுக்கு தெரியும் என்றும் சிலர் பேசிக் கொண்டு இருப்பதைத் தற்செயலாகக் கேட்ட பின் சந்திரனுக்குப் படிப்பில் ஆர்வம் குன்றி விட்டது.தொட்டதெல்லாம் பொன்னாகும் வித்தையை உடனே கற்றுக் கொள்ளத் துடித்தான்.ஊரில் எந்த சாமியார் தென்பட்டாலும் அவர்களைச் சுற்றியலைந்து அந்த வித்தையைத் தனக்குக் கற்றுத் தரச் சொல்லி வற்புறுத்தினான்.

ஆனால் அவன் சந்தித்த சாமியார்களில் சிலர் தாங்கள் பொருள் ஆசையை அறவே துறந்து விட்டதனால் பொன்னாகும் வித்தையைப் பற்றி தெரியாது என்றனர்.ஆனால் சந்திரன் மனம் தளரவில்லை. தொட்டதெல்லாம் பொன்னாகும் வித்தை தெரிந்த சாமியார் ஒருவரை என்றாவது சந்திப்போம் என்று உறுதியாக நம்பினான். தன்பிள்ளையின் போக்கைக் கண்டு பதறிப் போன பார்கவி அவனுக்கு அறிவுரை கூறித்திருத்த முயன்று தோல்வியுற்றான்.

ஒரு நாள் இரவு அவனுக்கு உணவு பரிமாறுகையில் பார்கவி நீ இப்போதெல்லாம் அடிக்கடி பள்ளிக்கு வருவதில்லை என்று உன் ஆசிரியர் என்னிடம் சொன்னார். நீ பள்ளிக்கு செல்லாமல் வேறு எங்கே போகிறாய்? என்று கேட்க சந்திரன் அவளிடம் உண்மை சொல்ல மறுத்தான். தாயார் அவனை வற்புறுத்தவும் , கோபங் கொண்ட சந்திரன் பாதி சாப்பாட்டிலேயே வீட்டை விட்டுச் சென்று விட்டான். கால் போன போக்கில் வெகு நேரம் சுற்றிய பிறகு களைத்துப் போய் அம்மன் கோயிலை அடைந்து அங்கு சென்று அமர்ந்து ஓய்வெடுக்க ஆரம்பித்தான்.

நடு இரவில் விழித்துக் கொண்டவன், தனக்கருகில் ஒரு சாமியார் பத்மாசனம் போட்டு அமர்ந்து ஏதோ மந்திரம் உச்சரித்துக் கொண்டிருந்ததை கண்டான். உடனே அவனுடைய ஆர்வம் மீண்டும் கொழுந்து விட்டெரிய, அவன் அவரை அணுகினான்.

கண் விழித்து அவனை நோக்கிய சாமியார் உன் பெயர் சந்திரன் தானே!என்று கேட்டதும் வியப்புற்றான். சாமி! என் பெயர் உங்களுக்கு எப்படி தெரியும்? என்று அவன் ஆவலுடன் கேட்க, அவர், எனக்கு எல்லா வித்தைகளும் தெரியும். அதனால் உன் பெயரை கண்டு பிடிப்பது அவ்வளவு ஒன்றும் சிரம மில்லை! என்றார்.

அப்படியானால் உங்களுக்கு தொட்டதை எல்லாம் பொன் ஆக்கும் வித்தை தெரியுமா? என்று சந்திரன் ஆவலுடன் கேட்க, அவர் தெரியுமென்றார். உடனே அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கிய சந்திரன், சாமி! தயவு செய்து அந்த வித்தையை எனக்கு கற்று தாருங்கள்! என்று கெஞ்சினான். மகனே! அந்த



வித்தையை உனக்கு கற்றுதர வேண்டுமானால், அதற்குரிய தகுதிகளை நீ பெறவேண்டும்! உன்னால் முடியுமா? என்றார் சாமியார்.

எதுவானாலும் சொல்லுங்கள்! நான் செய்வேன்! என்றான் சந்திரன். முதலில், உன் பள்ளிப்படிப்பை ஒழுங்காக முடிக்க வேண்டும். உன் தாய் சொல்கிறபடி கீழ்படிந்து நடக்க வேண்டும். உன்னால் வாழ்க்கையில் உயர முடியும் என்ற தன்நம்பிக்கை உன்னுள் வளர வேண்டும். இவ்வாறு கல்வி, நற்குணம், தன்நம்பிக்கை ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கினால் தான், அந்த வித்தையை கற்க

## அம்புலி மாமா கதைகள்

முடியும். நாளை முதல் நீ அவ்வாறு நடக்க முயற்சி செய்! ஓராண்டிற்குப் பின் உன்னை சந்திப்பேன்.· நீ உண்மையாகவே மாறியிருந்தால், அந்த வித்தையை உனக்கு கற்றுத் தருவேன்! என்றார்.

அப்படியே செய்வேன். ஓராண்டி



னில் நீங்களே வியக்கும்படி நான் மாறிக் காட்டுகிறேன்! என்று சூளுரைத்து விட்டு, சந்திரன் பொழுது விடிந்ததும் வீடு சென்றான். கோபத்தில் வெளியேறிய மகன் வீடு திரும்பியது கண்டு பார்கவி நிம்மதியடைந்தாள்.

அன்று முதல், அவள் தன் மகனிடம் வியத்தகு மாறுதலை கண்டாள். முன்பெல்லாம் படிக்காமல் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவன், அன்று முதல் படிப்பில் மிகுந்த அக்கறை காட்டத் தொடங்கினான். அவளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தான். பள்ளிக்கு ஒழுங்காகச் செல்ல ஆரம்பித்தான். படிப்பில் அவனுடைய ஆர்வம் வளர்ந்தது.

நல்ல மதிப்பெண்கள் பெறத் தொடங்கினான். அவனுடைய தன்னம்பிக்கை அதிகரித்தது. அவனுடைய மாறுதலைக் கண்டு பார்கவி மிகவும் மகிழ்ந்தாள். இவ்வாறு ஓராண்டு சென்றது. ஒரு நாள் திடீரென அதே சாமியார் சந்திரன் வீடு தேடி வந்தார். மகனே! என்னை நினைவிருக்கிறதா? நீ கேட்ட வித்தையை கற்றுத்தர நான் வந்துள்ளேன்! என்றார்.

சாமி! மன்னிக்க வேண்டும்! எனக்கு இப்போது அந்த வித்தையை கற்றுக் கொள்வதில் ஆர்வமில்லை! என்று சந்திரன் கூறியதும் சாமியார் ஆச்சரியப் பட்டார். என்னப்பா? ஏன் இந்த திடீர் மாறுதல்? என்று கேட்டார்.

இப்போது எனக்கு அதில் ஆசை பேரய்விட்டது! என்று நான் படிப்பில் அக்கறை காட்ட ஆரம்பித்தேனோ அன்று முதல் இதில் ஆர்வம் குன்றி விட்டது! என்றான். அவன் கேட்டதை கேட்டு புன்னகைத்த சாமியார் மகனே! இந்த பதிலைத்- தான் நான் உன்னிடம் இருந்து எதிர்பார்த்தேன். கல்வி தான் உண்மையான செல்வம் என்பதை நீ இப்போது புரிந்து கொண்டு விட்டாய். உன்னுடைம் தன்னம்பிக்கையும் அறிவும் வளர வளர செல்வத்தை பற்றி நீ கொண்டிருந்த தவறான கருத்துக்கள் உன்னிடமிருந்து விலகி விட்டன. உழைத்து சம்பாதிக்கும் செல்வம் தான் நிலைக்கும். குறுக்கு வழியில் வரும் செல்வம் வந்தது போலவே மறைந்து விடும். இது தான் எனக்கு தெரிந்த தொட்டதெல்லாம் பொன்னாக்கும் வித்தை! என்றார்.


தொடர்ந்து நான் உன் தந்தையின் நண்பன் நாராயணன். உன்னை மாற்றுவதற்காக சாமியார் வேடம் போட்டு நடித்தேன்! என்று கூறியவாறே தன் போலி தாடியை களைத்தார்.

அவரை சந்திரன் வியப்புடன் நோக்கிய போது அங்கு வந்த பார்கவி தன்னுடைய கணவரின் நண்பரை வரவேற்று தன் மனமார்ந்த நன்றியை தெரிவித்தாள். சந்திரனும் அவருக்குத் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டான்.

# அதிசய உலகம்...




## துவிச்சக்கர வாகனத்தில் பயணமாகும் வெட்டுக்கிளி



இந்தோனேசியாவில் Borneo-வைச் சேர்ந்த Ecoஎன்ற புகைப்படக்காரர் தன்னு டைய புகைப்படக் கருவியினால் வித்தியாசமான வடிவில் காணப்பட்ட வெட்டுக்கிளியினை படமெடுத்துள்ளார்.

இந்த வெட்டுக்கிளி மாலை சூரியன் மறையும் தருணத்தில் செடியின் மேல் அமர்ந்திருந்தது துவிச்சக்கர வாகனத்தில் அமர்ந்திருப்பது போல் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம்.

## பறக்கும் போது உறங்கும் அதிசய அல்பட்ரோஸ் பறவை



அல்பட்ரோஸ் பறவைகள் மிகத் திறனுடன் காற்றோட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்தி அதிக அலுப்பின்றி வெகு தொலைவு பறக்க வல்லவை. இவை நீரில் வாழும் கணவர் (Squid) மீன் குறில் (Krill) முதலியவற்றை உணவாக உட்கொள்கின்றன. அல்பட்ரோஸ் பறவைகள் கடலிடையே உள்ள சிறு தீவுகளில் பெருங்கூட்டமாக வாழ்கின்றன. அல்பட்ரோஸ் பறவைகள் இணையாக வாழ்நாள் முழுவதும் ஒன்றாகவே (இணை பிரியாமல்) வாழ்கின்றன.

இவ்வினத்தின் உயிரியல் வகைப்பாட்டு பெயர் Diome didae என்பதாகும். இவ்வினத்தில் 21 வகையான உயிரினங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் 19 இனங்கள் மிக அருகிய உயிரினப்பட்டியலில் உள்ள பெரும் வெண் அல்பட்ரோஸ் எனும் பறவையின் இயற்கை விரிப்பளவு இன்றுள்ள பறவைகள் யாவற்றிலும் மிக நீளமானது. இவை கடல் பறவைக்கு பூமியின் தெற்குப் பகுதியில் உள்ளகடல் பகுதிகளில் தான் அல்பட்ரோஸ்கள் வசிக்கின்றன. முட்டையை விட்டு வெளிவந்து பறக்கத் தொடங்கிவிட்டால் பிறகு இந்தக் கடற்பறவைகள் கரையில் இறங்குவதில்லை. கீழே இறங்காமல் ஏறத்தாழ ஐந்துவருடங்கள் தொடர்ந்து பறப்பதற்கு இவற்றால் முடியும். பறப்பதற்கிடையில்தான் இவை உண்கின்றன, உறங்குகின்றன.

## 1200 கோடி பழைமைவாய்ந்த சிறிய நட்சத்திரம் கண்டுபிடிப்பு




ஒக்லகோமா பல்கலைக்கழக வானியல் ஆராய்ச்சி உதவி பேராசிரியர் கிலிக் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது 1100 கோடி முதல் 1200 கோடி ஆண்டு பழைமைவாய்ந்த 2 சிறிய நட்சத்திரங்களை கண்டுபிடித்தனர்.

வெள்ளை நிறத்தினால் ஆன அவை பூமியில் இருந்து 100 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளன. இவற்றை மனிதர்கள் பார்க்க முடியும். இவற்றில் ஒன்று எரியும் அடுப்பு போன்று தகதகவென வெப்பமாகவும் மற்றொன்று சிறிது குளிர்ச்சியாகவும் உள்ளன.

கிலிக் மற்றும் அவரது குழுவினர் நாசாவின் சக்திவாய்ந்த ஸ்பிட்சர் விண்வெளி டெலஸ்கோப் மூலம் இவற்றை கண்டுபிடித்து 3 ஆண்டுகள் ஆய்வு மேற்கொண்டனர்.

## 15 நாட்களில் 30 மாடி கட்டடம் கட்டி புதிய சாதனை



15 நாட்களில் 30 மாடி உயர கட்டடம் ஒன்றை கட்டி முடித்து சீனா புதிய சாதனை படைத்துள்ளது. இக் கட்டடம் சீனாவின் ஹியூனான்மாகாண தலைநகரான சாங்ஷா நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

பணிகளை பிராட் சஸ்டெயினபிள் பில்டிங்ஸ் அமைப்பு செய்து வருகிறது. இது தொடர்பாக அந்த அமைப்பின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கட்டட கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் முதலில் அங்கு குவிக்கப்பட்டன.

பின் பணியாளர்களை வைத்து 15 நாட்களில் 30 மாடி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது பெரிய சாதனையாகும். இக்கட்டடம் தொழிற்சாலை பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராட் சஸ்டெயினபிள் பில்டிங்ஸ் அமைப்பு இதற்கு முன் ஒருவார கால அளவில் 15 மாடி ஹோட்டலையும் ஒரே நாளில் 6 மாடி பெவிலியனயும் கட்டி முடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.


## நீரினடியில் நீந்தும் அதிசய நாய்



நாய்களின் உடல் வடிவமைப்பானது நீர்நிலைகளில் நீந்துவதற்கு ஏற்றாற் போல் காணப்படும். எனினும் இவை பொதுவாக நீரின் மேற்பரப்பிலேயே நீந்தும். ஆனால் அதிசய நாய் ஒன்று நீர்நிலையின் அடிப் பகுதி வரை சென்று மிக குஷியாக நீச்சல் போடுகின்றது.

இவ்வாறு நீரின் அடிப்பகுதியில் நீந்தும் போது சுவாசிப்பதற்கான ஒட்சிசன் நாயால் பெற முடியாத போதிலும் சிறப்பான பயிற்சிகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு சுவாசம் இன்றி நீச்சலில் சாகசம் செய்கின்றது.

## வளர்ந்து வரும் பறக்கும் நாய்



நாய் ஒன்று ஒலியின் சந்தத்திற்கு ஏற்ப ஸ்கிப்பிங் செய்து அசத்துவது இணையத்தில் பிரபல்யமாகியுள்ளது. பதினொரு வயதான இந்த நாய் ஒரே தடவையில் இரண்டு முறை ஸ்கிப்பிங் செய்வதுடன் மிகவும் உயரமாகவும் துள்ளிக்குதித்தும் அசத்துகின்றது. அமெரிக்காவில் வளர்ந்து வரும் குறித்த நாயின் சாகசத்தைக் காணொளியிலும் வெளியிட்டுள்ளனர் அதனை பறக்கும் நாய் என குறிப்பிட்டிருக்கின்றனர்.

# பிரேரணை விடயத்திற்கும் கூடங்குளம் எதிர்ப்பிற்கும் எவ்வித தொடர்புமில்லை

## அணுசக்தி அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததற்கு பதிலடியாகவே கூடங்குளம் அணு உலைக்கு இலங்கை எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் அணுசக்தி அதிகாரசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அணுஉலை அமைப்பது தொடர்பாக இலங்கை ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கூடங்குளம் விவகாரம் தொடர்பாக இந்திய ஊடகங்கள் வெளியிடும் கருத்து தவறானது. இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுகள் மூலம் இருநாட்டு உறவுகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக கூடங்குளத்திற்கு எதிராக இலங்கை செயற்படவில்லை. கூடங்குளம் அணுஉலையினால் அணுக்கசிவு அல்லது பாதிப்பு ஏதும் ஏற்படுமானால் அதிலிருந்து பாதுகாப்பு பெறும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது.

அதனை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அணுசக்தி இடர்தடுப்பு திட்டமொன்றை முன்னெடுப்பதற்கான உடன்பாடு ஒன்றை கைச்சாத்திடுவது தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்க இரு ஆண்டுகளுக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இதற்காக உடன்பாட்டு நகலை தயாரித்தது.

ஆனால், இந்திய தரப்பில் அதற்கு பதில் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அனைத்துலக அணுசக்தி முகவர் அமைப்பு மாநாட்டில் இரு நாடுகளும் சந்தித்து பேச்சு நடத்தி வருகின்றன.

இந்தியாவுடன் இது பற்றிய உடன்பாடு செய்து கொள்ள இலங்கை எதிர்பார்த்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வெடிபொருட்களுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

உப்புக்குளம் பிரதேசத்தில் வெடி பொருட்கள் சிலவற்றுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 15 ஜெலக்நைட் குச்சுகளும், 20 டெட்டனேட்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவரிடம் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-2)

# போதைப்பொருள் கடத்தல்; ரயில்வே பரிசோதகர் கைது

(பதுளை)

ஹெரொயின் விற்பனை செய்த புகையிரத நிலைய பரிசோதகர் ஒருவரை பதுளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் 400 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை தன்வசம் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பதுளை புகையிரத நிலைய பரிசோதகர் கடந்த காலங்களில் மிகவும் இரகசியமான முறையில் இந்த போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டு வந்துள்ளார். கடந்த 11 ஆம் திகதி இரவு தபால் புகையிரதத்தில் ஹெரோயின் பொதியை அனுப்ப முயல்கையில் மாட்டிக் கொண்டுள்ளார்.

புகையிரத நிலைய பரிசோதகருக்கு வானொலி உபகரணத் தொகுதியொன்றை நண்பரொருவர் அனுப்புவதாகவும் அந்தப் பொதியை இரவு தபால் புகையிரதத்தில் அனுப்புமாறு தெமட்டகொட புகையிரத நிலைய போர்மனுக்கு இந்த புகையிரத நிலைய பரிசோதகர் அறிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் வந்த பெண்ணொருவர் பொதியை புகையிரத நிலைய போர்மனுக்கு கொடுத்துள்ளார். பொலிஸார் குறித்த பொதியை பரிசோதனை செய்த போது அதில் 30 கிராம் ஹெரோயின் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அரசியல் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இரு நாடுகளும் கவனம்

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கு பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இணக்கம் கண்டுள்ளனர்.

இரு நாட்டு தலைவர்களதும் தலைமையில் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இருபக்க பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கப்பாடு காணப்பட்டது.

இரு நாட்டு மக்களும் நன்மை பெறும் வகையில் இரு நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளின் உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு நாட்டு தலைவர்களும் விசேட கவனம் செலுத்தினர்.

பாலஸ்தீன நோக்கத்திற்காக இலங்கை தொடர்பாக அளித்துவரும் ஒத்துழைப்புக்கு பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் இச்சமயம் பாராட்டு தெரிவித்தார்.

அதேநேரம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தி சுபீட்சத்தை நோக்கி தற்போது இலங்கை பயணிப்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உங்களது தலைமைத்துவத்தினால் தான் இதனை அடைய முடிந்துள்ளது. உங்களது வழிகாட்டலின் ஊடாக இலங்கையின் எதிர்காலம் மிகவும் சிறப்பாக அமையும் எனக் கருதுகின்றேன் என்றும் ஜனாதிபதி அப்பாஸ் சுட்டிக்காட்டினார்.

இலங்கை, சமாதானத்தின் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வேளையில் இங்கு நிலவுகின்ற முதலீட்டு வாய்ப்புக்களில் கவனம் செலுத்துமாறு பாலஸ்தீன வர்த்தக சமூகத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பும் விடுத்தார்.

பாலஸ்தீன கல்வி திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி மற்றும் முதலாம் தர வகுப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வேலைத்திட்டத்திற்கு இலங்கை தற்போது உதவி அளித்து வருகிறது.

இதேநேரம் பாலஸ்தீன மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளில் இலங்கையில் உயர்கல்வியை தொடர வாய்ப்புகள் அளிக்கப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார். பாலஸ்தீனத்திற்கும் இலங்கைக்குமிடையிலான உல்லாச பயணத்துறையை மேம்படுத்துவதற்கான கூட்டுவேலைத் திட்டமொன்றும் இரு நாடுகளுக்குமிடையில் உயர் கல்வி துறையில் விரிவுரையாளர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் பரிமாறுவதற்கான திட்டமொன்றும் செயற்படுத்துவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார். (அ-2)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செயய்ப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற அரியாலை ஐக்கிய கழகத்திற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் ஆகியோர் இணைந்து வெற்றிக் கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இனப்பிரச்சினை குறித்த அரசின் நிலைப்பாடு ஏமாற்றமளிக்கிறது

## சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

தேசிய இனப்பிரச்சினை குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு ஏமாற்றம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதில் அரசாங்கம் மெத்தனப் போக்கை பின்பற்றி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து உள்நாட்டு அல்லது சர்வதேச ரீதியில் கேள்வி எழுப்பப்படும் சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் அரசாங்கம் கருத்துக்களை முன்வைப்பதாக தெரிவித்துள்ளார்.

இதுவரையில் அமைக்கப்படாத பாரரளுமன்ற தெரிவுக்குழுவினை பிரச்சினைக்கு தீர்வு காணும் பிரதான பொறிமுறையாக அரசாங்கம் குறிப்பிட்டு வருவது அதிருப்தி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளாமல் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதில் பயனில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கொத்மலை நீர்மட்டம் உயர்வு

கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ள நிலையில் அதன் அவசர கதவுகளை சில சந்தர்ப்பங்களில் திறக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜீ. குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தாழ்வான பிரதேசங்களில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கால நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தாழமுக்க நிலை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இருக்கும் என் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்துங்கள்

# இந்தியக்குழுவினரிடம் பா.ஜ.க, மா.க.க வலியுறுத்து

(சென்னை)

இலங்கை பயண அறிக்கையை எம்.பிக்கள் தனித்தனியாக பிரதமரிடம் வழங்கக் கூடாது. குழுத்தலைவர் மூலமாகவே வழங்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் பொன்.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

தங்கள் பயணம் குறித்து தனியாக அறிக்கை தயாரித்து பிரதமரிடம் வழங்குவோம் என இக்குழுவில் இடம்பெறும் காங்கிரஸ் எம்.பி சித்தார்த்தன் தெரிவித்திருந்தார்.

இவரின் இக்கூற்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை தமிழர் படுகொலை நடந்த போதெல்லாம் அது குறித்து எந்த அறிக்கையும் கொடுக்காமல் தமிழர் அழிவை பற்றி கவலைப்படாமல் தமிழர்களின் அழிவுக்கு காரணமான இலங்கை அரசுக்கு துணையாக நின்ற மத்திய காங்கிரஸ் கட்சி 3 ஆண்டுகளுக்கு பிறகாவது தமிழர்களின் நிலையை பற்றி தெரிந்து கொள்ள குழுவை அமைத்துள்ளது. காலம் கடந்ததாக இருந்தாலும் வரவேற்கத்தக்கது.

இது தொடர்பில் பாராளுமன்ற குழுத் தலைவர் சுஷ்மா சுவராஜை சந்தித்த போது தமிழர்கள் தம் சொந்த மண்ணில் சகல உரிமையோடு எவ்வித அச்சமும் இன்றி நிமிர்ந்து வாழும் நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். தங்கள் பயணம் குறித்து தனியாக அறிக்கை தயாரித்து பிரதமரிடம் வழங்குவோம் என்று இந்த குழுவில் செல்லும் காங்கிரஸ் எம்.பி. சித்தன் கூறியிருக்கிறார். இதை அவர் தவிர்க்க வேண்டும். குழுத் தலைவர் மூலமாக பிரதமருக்கு வழங்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனின் அறிக்கையில்:-

பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் உறுப்பினர் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவது என்று மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மத்தியக்குழு உறுப்பினரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான டி.கே. ரங்கராஜன் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

இந்தக் குழு இந்தியா அளித்துள்ள நிதி முறையாக பயன்படுத்தப்படுகின்றதா? என்பதையும் அறியவுள்ளது. மேலும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள தமிழ் மக்களைச் சந்திப்பது; தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கவும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணவும் வலியுறுத்தவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் நோக்கம் நிறைவேறுவதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

மேலும் இந்திய் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கையிலிருந்து திரும்பியதும் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கும் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அறிக்கையில் ஜி. ராமகிருஷ்ணன் கூறியுள்ளார். (அ-2)

# மஹிந்த அரசை குளிர்மைப்படுத்தவே இந்தியக் குழு இங்கு வந்துள்ளது

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான உளவுப் பிரிவினரே இலங்கை வரும் இந்தியப் பாராளுமன்றக் குழுவினர் எனவும் தமிழ் மக்களை மேலும் மேலும் எவ்வாறு அடக்கி ஆள முடியும் என்பதனையே இலங்கை அரசாங்கமும் இந்தியக் குழுவும் ஆராயும் என நவ சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தியக் குழு விஜயம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரித்தது. இதனால் ஆத்திரமடைந்துள்ள இலங்கை அரசாங்கத்தை ஆசுவாசப்படுத்தவே இக்குழு இங்கு வருகின்றது.

இதன் மூலம் மன்மோகன் சிங்கை மகிழ்ச்சிப்படுத்தி மஹிந்தவை ஆசுவாசப்படுத்தி வடக்கிலுள்ள தமிழ் மக்களின் கடல்வளம், கனிய வளம் மற்றும் காணிகளை கொள்ளையடிப்பதே இக்குழுவின் திட்டமாகும். தமிழ் மக்களை வாழ வைப்பதற்கு அல்ல அம்மக்களை அடக்கியாள்வதே இவ்விஜயத்தின் இலக்காகும்.

நஷ்டம் இலங்கை அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்வதாலும் அதன் ஸ்திரத் தன்மையை இல்லாதொழிப்பதாலும் இந்தியாவிற்கு பாரிய நஷ்டம் ஏற்படும். இதனால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான உளவுப் பிரிவினரென்ற ரீதியிலேயே இக்குழு இங்கு விஜயம் செய்கின்றது.

ஜெயலலிதா தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தை பாதுகாக்கும் இந்தியக் குழுவில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிரதிநிதி வாபஸ் பெறப்பட்டமை வரவேற்புக்குரிய விடயமாகும்.



தமிழர்களின் உணர்வுகளை தமிழ் நாட்டு மக்கள் வெளிப்படுத்தியமையே இதற்கு காரணமாகும்.

இக்குழுவின் விஜயத்தால் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கப்போவதில்லை மாறாக அம் மக்களின் வளங்கள் சூறையாடப்படவுள்ளதெனவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். (அ-2)

# குமார் குணரட்னத்தின் கடத்தல் மஹிந்தவையும் ஆட்டி வைத்துள்ளது

(கொழும்பு)

முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிரேம்குமார் குணரட்னம் மற்றும் திமுத்து ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்ட சம்பவம் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலாளருக்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவர் கடத்தப்பட்டமை, இதன் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரை அவமதிக்கும் வகையில் பகிரங்கமாக கருத்து வெளியிட்டமை என்பன தூதரக தரப்பு மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் கவனத்தை ஈர்த்ததாகவும் இந்த நிலைமையில் குமார் மற்றும் திமுத்துவை விடுதலை செய்யுமாறு சர்வதேசத்தில் இருந்து கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அத்துடன் இந்த கடத்தல் சம்பவமானது அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஜெனீவா யோசனை தொடர்பிலும் தீர்மானகரமான விடயமாக மாறியுள்ளது. சர்வதேச ரீதியில் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக குணரட்னம் உயிருடன் இருப்பதாக அறிவிப்பதற்காகவே ஐ.டி.என் தொலைக்காட்சியில் தொறமண்டலாவ நேரடி நிகழ்ச்சி பாதுகாப்பு செயலாளருக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சின் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


## NEWZELANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzeland நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzeland இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(8175)

பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை

-தமிழ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வீதி அமைக்கப்படுவதை மேற்பார்வை செய்யுங்கள்

எங்கள் நாட்டில் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு நிதி, தனி நபர்களின் அல்லது நிறுவனங்களின் கபளீகரத்திற்கு உட்பட்டுள்ளதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இவ்வாறு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மோசடிகள் இடம்பெறுவதை தடுக்காத தன் காரணமாக அபிவிருத்திப் பணிகள் பிரி யோசனமற்றுப் போகின்றன.

உதாரணமாக அபிவிருத்திக்கு உதவக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளான வீதி அமைத்தல், புகையிரதப்பாதை நிர்மாணித்தல், பாலம் கட்கட்டுதல், துறைமுக நிர் மாணம் போன்றவற்றை எடுத்துக்கொண்டால்,

வீதி அமைத்தல் என்ற விடயத்தில் நிதி மோசடிகள் கண்டபாட்டில் இடம்பெறுவதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

குறிப்பாக வடபகுதியில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதி அமைப்பில் இடம்பெற்ற பெரும் மோசடிகளால் திருத்தி அமைக்கப்பட்ட வீதிகள் ஒருவருடகாலத்திற்கு கூட நின்றுநிலைக்க முடியாமல் போயிற்று.

இதனால் மக்களின் பங்களிப்புகள் துன்பம் நிறைந்ததாக இருப்பதை காணமுடிகின்றது.

இது தவிர, தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட முக்கிய வீதிகளின் புனரமைப்பு பணிகளில் சில நிறுவனங்கள்தவிர, ஏனைய நிறுவனங்கள் செப்படிவித்தைகாட்டுவதை அறிய முடிகின்றது.

வீதி அமைப்புப் பணியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களில் மக்களால் பாராட்டப்படக் கூடிய வகையில் வீதிகளை செம்மையாக அமைக்கும் நிறுவனங்களை பார்க்கும் போது அவை, கடுமையான-இறுக்கமான மேற்பார்வையை செய்கின்றன.

அதற்காக துறைசார் வல்லுநர்களை அந்த நிறுவனங்கள் சேவையில் ஈடுபடுத்தியுள்ளன. ஆனால் வீதி அமைப்பில் மோசடி செய்கின்ற அல்லது உச்சலாபம் அடையும் பொருட்டு தரமற்ற முறையில் வீதி அமைக்கும் நிறுவனங்கள், இலஞ்சத்தினூடாக மேற்பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்ள,

அந்த நிறுவனங்களால் அமைக்கப்படுகின்ற வீதிகள் குறுகிய காலத்திலேயே சேதமடைகின்றன.

எனவே இது விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது முழுமையான மேற்பார்வை செய்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் மேற்பார்வை போதுமானதாக இல்லாவிட்டால் அல்லது நட்பு, உறவு முறையில் செயற்பட்டால் அமைக்கப்படும் வீதிகளால் மக்கள் நீண்டகாலத்திற்கு நன்மையடைய முடியாமல் போகும்.

இதுதவிர வீதிகளை அமைக்கும் போது குறித்த வீதிகளில் இருக்கக் கூடிய சிறு திருத்தங்களை செய்வதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாகின்றது.

எனினும் இது விடயத்தில் அசமந்தம் நிலவுகின்றது. சிலதினங்களுக்கு முன்னர், அகலிக்கப்படவுள்ள வீதி ஒன்றில் சிறுதிருத்த வேலை செய்யப்பட்டிருந்தது.

அந்த திருத்தவேலையை பார்த்தபோது நான்கு, ஐந்து நாய்கள் சண்டையிடும்போது, சண்டையிடும் இடத்தை கிளறிக்கொள்ளுமல்லவா!

அதுபோல அச்சிறு திருத்தவேலை இருந்ததை காணமுடிந்தது. அப்படியானால் வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்பு எப்படியிருக்கும்? இது வீதி அதிகார சபைக்கு சமர்ப்பணம்.

# துமிந்தவுக்கு மற்றொரு சத்திரசிகிச்சை
# அதனால் அவர் நீதிமன்றிற்கு வரவில்லை
## குற்றப்புலனாய்வு பொலிஸார் மன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சந்தேக நபரான துமிந்த சில்வாவுக்கு சிங்கப்பூரில் உள்ள எலிசபெத் வைத்தியசாலையில் மற்றுமொரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ள தாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீதிபதியிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், துமிந்த சில்வாவுக்கு இந்தவாரம் மற்றுமொரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் காரணமாக அவரால் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க முடியாதெனவும் துமிந்த சில்வாவின் தந்தை தம்மிடம் வாக்கு மூலம் அளித்ததாகவும் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

இந்த அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரந்த வளலியட்ட, துமிந்த சில்வாவை கைது செய்வதற்கான பிடியாணையை சர்வதேச பொலிஸாருக்கு வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றத்திடம் கோரினார்.

பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து குற்றப்புலனாய்வு பிரிவினர் துமிந்த சில்வாவின் நலனை பாதுகாப்பதில் அக்கறையாகவுள்ளனர் எனவும் சட்டத்தரணி மேலும் கூறினார்.

சந்தேக நபரை கைது செய்ய முடியாதுள்ளதாக நீதிமன்றத்திற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கும் பட்சத்தில் மாத்திரமே சர்வதேச பொலிஸாருக்கு கைது செய்வதற்கான பிடியாணையை வழங்க முடியும் என நீதிபதி கூறினார்.

துமிந்த சில்வாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய, துப்பாக்கிச் சூடு காரணமாக தனது கட்சிக்காரர் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் மறைந்திருக்க வில்லை எனவும் நீதிமன்றத்திற்கு கூறினார்.

இந்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களை தொடர்ந்தும் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி பணித்தார். (ந-8,11)

# நெடுந்தீவு சிறுமி கொலை சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் 13 வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொடூரமான முறையில் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான கந்தசாமி ஜெகதீஸ்வரனை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்தவழக்குநேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாத நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் சட்டத்தரணிகளான குகனேஸ்வரன், ஸ்ரெலஸ்ரின், சிறிரஞ்சினி ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

குறித்த வழக்கில் கொலை செய்யப்பட்ட சிறுமியின் சகோதரனின் சாட்சியமும் மன்றில் நேற்று பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து மேலதிக சாட்சியங்களை மன்றில் முற்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் மகேந்திர ராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டதோடு மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபரினை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-4)

# நிர்வாகத் தெரிவு

(உடுப்பிட்டி)

கலையரசி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் 25 ஆவது ஆண்டு நிர்வாகத் தெரிவும் அண்மையில் நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் ப.தயாளதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக தி.யோகச்சந்திரா, செயலாளராக ஐ.சசிகரன், பொருளாளராக வி.ஜொனி ஆகியோரும் அத்துடன் 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி கலந்து சிறப்பித்தார். (அ-3-52)

# ஐந்து சந்தியில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் சிறியரக கன்டர் வாகனமும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மானிப்பாய் வீதி ஐந்து சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஓட்டுமடத்தினைச் சேர்ந்த குடும்பஸ்தரான சி.தயானந்தன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த பகுதியில் நாளாந்தம்விபத்துக்கள்நடைபெறுகின்றபோதிலும் அப்பகுதியில் வேகக்குறைப்பு குறியீடுகளோ,

சமிக்ஞைகளோ இன்னமும் வைக்காத நிலையில், போக்குவரத்துப் பொலிஸாரும் குறித்த பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

# நல்லூரில் கொள்ளையடித்தவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

வீடு புகுந்து நகைகள் மற்றும் பணத்தினை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் பகிரங்க பிடியாணை மூலம் பிடிபட்ட நபருக்கு யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு நல்லூர் செட்டித் தெருவில் உள்ள வீடொன்றில் புகுந்து ஒரு இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகை, பணம் என்பவற்றினை கொள்ளையடித்ததாக குற்றச்சாட்டப்பட்ட இருவரில் ஒருவர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தண்டனை அனுபவித்து விடுவிக்கப்பட்ட நிலையில் 2ஆவது சந்தேக நபருக்கு மன்று பிடியாணை பிறப்பித்தது.

கோண்டாவில் ஸ்ரேசன் வீதியினை சேர்ந்த குறித்த நபர் கடந்த வரும் 11ஆம் மாதம் 20ஆம் திகதி யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று குறித்த வழக்கு மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபருக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் மேற்குறித்த நபருக்கு மல்லாகம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் நீதிமன்றங்களிலும் பல வழக்குகள் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

# பொலிஸ் நடமாடும் சேவை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நடமாடும் பொலிஸ் சேவை இன்று புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிக்கு இடைக்குறிச்சி சிவசுப்பிரமணியம் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு ஆகியவற்றை தொலைத்தவர்கள் அதற்கான முறைப்பாடுகளை செய்து அவற்றுக்கான பத்திரத்தை உடன் பெற்றுக்கொள்வதுடன் முன்னர் தொலைத்து முறைப்பாடு செய்தவர்களும் அதற்கான பத்திரத்தை அன்றைய தினம் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் வரணி ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியரால் இலவச வைத்தியமும் வழங்கப்படும் எனவும் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஜெகத் பண்டார தெரிவித்துள்ளார். (அ-3-29)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்
## வலிமை குறித்து சிந்தியுங்கள்



உற்சாகத்துடன் கடமைகளைச் செய். ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கான முதல் அறிகுறியே உற்சாகமாக இருப்பதுதான்.

அறிவுச்சுரங்கத்தைத் திறப்பதற்கான திறவுகோல் மன ஒருமைப்பாடு மட்டுமே. மன ஒருமையால் இயற்கையைக்கூட நம்மால் வெல்லமுடியும்.

கடவுளின் குழந்தைகளான நீங்கள் வலிமை உடையவர் என்று நினைத்தால் வலிமை படைத்தவர் ஆவீர்கள்.

பலவீனத்திற்கான பரிகாரம் பலவீனத்தைக் குறித்து ஓயாது சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.


மனிதனிடம் மறைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவது கல்வி. முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொண்டால் கட்டளையிடும் பதவியைத் தானாகப் பெற்று மகிழ்வீர்கள்.

அனைத்துத் தேவைகளை நிறைவேற்றவும் அனைத்து துன்பங்களையும் நீக்கும் பேராற்றல் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்பதை உணருங்கள்.

# இலங்கை சென்றுள்ள எம்.பி.க்கள் குழு தமிழர்களின் உண்மை நிலைமையை அறியுமா?

## டி.ராஜா கேள்வி

**இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலையை நேரில் பார்வையிட அனைத்து கட்சி எம்.பி.க்கள் குழுவை அந்நாட்டுக்கு அனுப்பி வைப்போம் என்று நாடாளுமன்றத்தில் பிரதமரும் வெளியுறவு அமைச்சரும் கூறினர். ஆனால் தற்போது செல்லும் எம்.பி.க்கள் குழுவில் தமிழர்களின் நலனில் முழுமையான அக்கறை கொண்டு செயற்படும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட சில கட்சிகளின் எம்.பி.க்.கள் இடம்பெறாமல் போனது ஏன்? என டி.ராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.**



இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிலைமை குறித்து ஆராய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் 13 எம்.பி.க்கள் கொண்ட குழு நேற்று முன்தினம் இலங்கை சென்றுள்ளது.

இக்குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்தப் பயணம் குறித்து டி.ராஜா கூறியதாவது,

தமிழகத்தில் ஆட்சிபுரியும் அ.தி.மு.க.வும் முக்கிய கட்சியான தி.மு.க.வும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க. உள்ளிட்ட தமிழர்கள் நலனில் உள்ள கட்சி எம்.பி.க்களும் இடம்பெறவில்லை.

மேலும் தற்போது இலங்கை சென்றுள்ள குழுவானது போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சந்தித்து அவர்களது உண்மை நிலையை முழுமையாக அறியுமா என்பது தெரியவில்லை.

இலங்கையில் உள்ள வைத்திய சாலைக்கு மருத்துவக் கருவிகள் வழங்குவது, வீட்டு வசதித் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளைத் தருவது, சைக்கிள்களை அளிப்பது, போன்ற வற்றுக்காக இக்குழு செல்வது போல் தெரிகின்றது.

எம்.பி.க்கள் குழு பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சந்திக்க வாய்ப்பு இருக்குமா என்பது கூட சந்தேகமே. காரணம் இலங்கை இராணுவத்தினர் அழைத்துச் செல்லும் பகுதிகளுக்கு மட்டுமே தான் இக்குழுவினர் செல்ல முடியும்.

ஆகவே இந்த குழு இலங்கை அரசுடனான இந்திய அரசின் நல்லெண்ணக்குழுவாகத் தான் இருக்குமே தவிர தமிழர்கள் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல் குறித்து ஆராயவோ, அவர்களுக்கான அரசியல் தீர்வுக்கு உதவுமா என்பது தெரியவில்லை.

மொத்தத்தில் இந்தக்குழுவால் முழுமையான பலன் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே என்றார். (அ-2)

## ஆப்கான் தாக்குதலின் எதிரொலி; இந்திய இராணுவத்திற்கு எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய திடீர் தாக்குதலைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினரை எச்சரிக்கையாக இருக்கும்படி மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆலோசனை கூறியுள்ளார்.

வருடாவருடம் நடைபெறும் இராணுவத்தளபதிகள் மாநாடு நேற்று முன்தினம் புதுடில்லியில் ஆரம்பமாகியது. தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்து அந்தோனி உரையாற்றுகையில்,

ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் பிராந்தியத்தில் நிலவும் சூழல் கவலை தரக்கூடியதாக அமைந்துள்ளது.

நமது தளபதிகள் மேலும் விழிப்புடன் அந்தப் பகுதியில் நடக்கும் விடயங்களை கவனித்து உரிய பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆப்கானிஸ்தானைப் பொறுத்தளவில் அந்த நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவுவதில் இந்தியா உறுதியுடன் இருக்கின்றது.

அந்நிய சக்திகளின் அச்சுறுத்தல் அகன்று அந்நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படும் வரை இந்தியா தனது உதவியைச் செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் தாக்குதல்களைத் தொடர்ந்து இந்திய இராணுவம் எப்போதும் பாதுகாப்புடன் எச்சரிக்கையாக இருக்கும் படியும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# மியன்மார் பொருளாதாரத்தடையை அவுஸ்திரேலிய அரசு தளர்த்த முடிவு



(மெல்போர்ன்)

மியன்மார் நாட்டின் மீது விதிக்கப்பட்ட தடைகளை அவுஸ்திரேலியா தளர்த்த முடிவு செய்துள்ளது.

நோபல் பரிசு பெற்ற மியன்மார் நாட்டின் ஜனநாயகத்தலைவர் ஆன் சாங்சூகி கடந்த 90 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற போதும் அவரை ஆட்சியில் அமர விடாமல் வீட்டு சிறையில் அடைத்து வைத்தது இராணுவ அரசு. இதனால் உலக நாடுகள் மியன்மார் மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளன.

கடந்த மாதம் நடந்த இடைத் தேர்தலில் ஆங்சாங்சூகி அமோக வெற்றி பெற்று பாராளுமன்றுக்குள் நுழைந்தார்.

இதை தொடர்ந்து மியன்மார் மீதான பொருளாதாரத் தடையை தளர்த்த மேற்கத்தைய நாடுகள் திட்டமிட்டுள்ளன. முதலாவதாக அவுஸ்திரேலியா சில தடைகளை தளர்த்த முடிவு செய்துள்ளது.


இது குறித்து அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பாப் கார் குறிப்பிடுகையில்,

மியன்மார் நாட்டு தலைவர்கள் அவுஸ்திரேலியாவில் பயணம் செய்ய தடை உள்ளது. தற்போது அங்கு காணப்படும் மாற்றத்தை கருத்தில கொண்டு ஜனாதிபதி தீன் சீன் உள்ளிட்ட 260 பேர் அவுஸ்திரேலியாவுக்கு வர அனுமதி அளிக்கப்படுகின்றது.

எனினும் மியன்மார் நாட்டு இராணுவ அதிகாரிகள், மனித உரிமை மீறலில் ஈடுபட்ட அதிகாரிகள், 130 பேர் மீதான தடை நீடிக்கின்றது. தடை நீக்கம் செய்யப்பட்டவர்கள், அவுஸ்திரேலியாவுடன் பொருளாதார ரீதியானஉறவை தொடர்வதற்கும் அனுமதி அளிக்கப்படும்.

மியன்மாரில் ஜனநாயக நடைமுறை தொடரும் பட்சத்தில் இந்தத் தடை அகற்றப்படும். ஜனநாயக முறை தொடராத பட்சத்தில் எங்களது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும் என்றார். (அ-2)

# உலக வங்கியின் புதிய தலைவர் நியமனம்



(வோஷிங்டன்)

உலக வங்கியின் தலைவராக அமெரிக்க வாழ் தென்கொரியாவைச் சேர்ந்தவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். உலக வங்கியின் தலைவராக உள்ள ரூபர்ட் ஜிலோயிக் பதவிக்காலம் வரும் ஜூலை மாதம் நிறைவு பெறுகிறது. புதிய தலைவரை உலக வங்கி தலைமை நிர்வாகம் அறிவித்தது.

அதன்படி உலக வங்கி இவரை புதிய தலைவராக நேற்று அறிவித்தது. தென்கொரியாவின் சியோல் நகரை சேர்ந்த ஜிம்-யோங்- கிம் (வயது-52). இதற்கு முன்பு ஐ.நா.வின் உலக சுகாதார அமைப்பின் எச்.ஐ.வி எயிட்ஸ் ஒழிப்புத்துறையின் இயக்குனராக இருந்தார். தற்போது உலக வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அமெரிக்கா, ஜப்பான், நைஜீரியாவைச் சேர்ந்தவர்களும் உலக வங்கி தலைவர் பதவிக்கு போட்டியிட்டனர். இறுதியில் தென்கொரியாவின் ஜிம் யோங்கிம் தேர்வு செய்யப்பட்டார். எதிர்வரும் ஜூலை மாதம் பதவியேற்கவுள்ளார். (அ-2)

# முஷாரப்பை கொல்ல முயன்ற கைதி பாக். சிறைத்தகர்ப்பில் தப்பியோட்டம்

பாகிஸ்தானில் உள்ள சிறைச்சாலையில் தீவிரவாதிகள் உட்பட 384 கைதிகள் தப்பிச் சென்றனர். இதற்கு பேஸ்புக் தான் காரணம் என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது தெரிய வந்துள்ளது. இங்கு தீவிரவாதிகள் உட்பட பல்வேறு கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை தீவிரவாதிகள் அங்கு திடீரென தாக்குதல் நடத்தினார்கள். அப்போது ரொக்கெட்குண்டுகளும் கையெறி குண்டுகளும் வீசப்பட்டதால் சிறைச்சாலை தகர்ந்தது.

பின்னர் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த தங்கள் கூட்டாளிகளை தலிபான்கள் விடுவித்தனர்.

கடந்த 2003 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதி முஷாரப்பை கொல்ல முயன்ற குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த அட்னன் ரஷித் என்ற கைதியும் நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளான்.

ரஷித்தை விடுவிப்பதற்காக பாகிஸ்தானின் தலிபான் தீவிரவாதிகள் தான் இந்த தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் சிறைக்குள் இருந்தாலும் கையடக்கத்தொலைபேசி உபயோகித்து வந்ததாகவும் பேஸ்புக் மற்றும் பல சமூக வலைத்தளங்களில் ரஷித்தின் பங்களிப்பு இருந்து வந்ததாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

பத்திரிகையாளர்கள் உட்பட பலருடன் சிறையிலிருந்தபடியே ரஷித் தொடர்பு வைத்ததுடன் அவர்களுடன் கைபேசியில் பேசியது மட்டுமன்றி அடிக்கடி குறுந்தகவல்களும் அனுப்பி வந்துள்ளான் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய்வந்துள்ளது. (அ-2)

# பராக் ஒபாமா, ஜோர்ஜ் புஷ் ஆகியோரை பிடித்துக்கொடுத்தால் தலைக்கு 80கோடி

## ஏட்டிக்குப்போட்டியாக வெளியானது அறிவித்தல்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆகியோரை பிடித்து கொடுத்தால் 80 கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என சமீபத்தில் அறிவிப்பு வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியாவின் மும்பையில் தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் பயங்கரவாதியான ஹபீஸ் சயீத் தலைக்கு அமெரிக்கா 50 கோடி ரூபா பரிசு தொகையை அறிவித்தது.

இதற்குப் போட்டியாக இங்கிலாந்தில் வசிக்கும் பாகிஸ்தான் வம்சாவளியான அகமது (வயது-53) ஒரு பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆகியோரை பிடித்துக் கொடுத்தால் 80 கோடி ரூபா பரிசுத்தொகை வழங்குவேன் என அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

சயீத் தலைக்கு அமெரிக்கா 50 கோடி ரூபா பரிசுத்தொகை அறிவித்து இருப்பதால் நானும் இந்த ரூபா 80 கோடி பரிசை அறிவிக்கின்றேன் என்று கூறினார். இவர் இங்கிலாந்தில் வசிக்கும் கோடீஸ்வரர் ஆவார்.

முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியை சேர்ந்தவர். இந்த பரிசுத்தொகை அறிவிப்பை தொடர்ந்து கோடீஸ்வரார் அகமதுவை கட்சியில் இருந்து நீக்கம் செய்து தொழிலாளர் கட்சி நடவடிக்கை எடுத்தது. கட்சியின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

அகமதுவின் செயல் கண்டனத்துக்கு உரியது. இது குறித்து விசாரணை நடைபெறுகிறது. அதுவரையில் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என கூறினார். (அ-2)


# பரபரப்பான ஆட்டத்தில் ராஜஸ்தான் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஐ.பி.எல் தொடரின் டெக்கன் சார்ஜர்ஸ் அணிக்கெதிரான நேற்றைய பரபரப்பான ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி அதிரடியாக விளையாடி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

5 ஆவது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடரின் 20 ஆவது லீக் போட்டியில் டெக்கன் சார்ஜர்ஸ்- ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதிய போட்டி ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மன்சிங் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.



நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கன் சார்ஜர்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.



இதன்படி தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார 44 ஓட்டங்களும், ஷிகர் தவான் 43 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் அரைச்சதம் கடந்து 52 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய டானியல் கிறிஸ்ரியன் 29 ஓட்டங்களுடனும், போல் டுமினி 58 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் டெக்கன் சார்ஜர்ஸ் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 196 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து, 197 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

தொடக்கவீரான அணித்தலைவர் ராகுல் டிராவிட் அதிரடியாக விளையாடி 26 பந்துகளில் 7 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 42 ஓட்டங்கள் எடுத்த கிறிஸ்ரியன் பந்தில் ஆட்டமிழந்தார்.


மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான அஜின்கியா ரகானே 44 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய அசோக் மெனாரியா 22 ஓட்டங்களும் எடுத்து அமித் மிஸ்ராவின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 197 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

களத்தில் பிரராட் ஹொட்ஜ் 21 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 48 ஓட்டங்களுடனும், யாக்னிக் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ராஜஸ்தான் றோயல்ஸின் வெற்றிக்கு வித்திட்ட பிரட் ஹொட்ஜ் தெரிவானார்.

# பெங்களூர் 6 விக்கெட்டுக்களால் புனேயை அதிரடியாக வென்றது



ஐ.பி.எல் போட்டித் தொடரின் 21-வது லீக் ஆட்டம் பெங்களூரில் உள்ள சின்னச்சாமி அரங்கில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் டானியல் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும், கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதின.

பெங்களூர் அணி இதுவரை தான் ஆடிய 4 ஆட்டங்களில் 1 வெற்றியும், 3 தோல்வியும் பெற்றுள்ளது. புனே அணி இதுவரை தான் ஆடிய 4 ஆட்டங்களில் 3 வெற்றியும், 1 தோல்வியும் பெற்றிருந்தது.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின.

பெங்களூர் அணியில் கடந்த போட்டியில் விளையாடிய முரளிதரன், மொஹமட் கைப், அரவிந்த் ஆகியோர் நீக்கப்பட்டு திலகரத்ன டில்சான், அப்பண்ணா, ஹர்சல் பட்டேல் ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

புனே அணியில் கடந்த போட்டியில் விளையாடிய முரளி கார்த்திக் நீக்கப்பட்டு, புவனேஸ் குமார் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற புனே வாரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.


இதன்படி அந்த அணியின் தொடக்க ஆட்டக்காராக ரெபின் உத்தப்பாவும், ஜெஸி ரைடரும் களமிறங்கினர்.

இருவரும் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினர்.

இதனால் புனே அணியின் ஓட்ட எண்ணிக்கை சீரான வேகத்தில் உயர்ந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 63 ஆக உயர்ந்த போது ரைடர் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அணித்தலைவர் கங்குலி 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

பின்னர் உத்தப்பாவும், சாமுவேல்ஸும் இணைந்து அதிரடியாக ஆடினர். சிறிது நேரத்தில் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த உத்தப்பா 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சாமுவேல்ஸ் தன் பங்கிற்கு 34 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார்.

இறுதியில் புனே அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்களைக் குவித்தது.



பெங்களூர் அணி சார்பில் வினேய் குமார் அதிகபட்சமாக 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் பெங்களூர் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பெங்களூர் சார்பில் 48 பந்துகளில் 4 பவுண்டரிகள், 8 சிக்ஸர்களுடன் 81 ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு உதவிய கிறிஸ் கெயில் ஆட்டநாயகனாக தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் கிங்ஸ் லெவின் பஞ்சாப் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளும் மோதுகின்றன.

# கே.சீ.சீ.சீ.அணியை யாழ்.சென்றல் அணி 72 ஓட்டங்களால் வென்றது

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை வருடா வருடம் நடத்தி வரும் அழைக்கப்பட்ட நான்கு அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 6-வது தகுதி காண் போட்டியில் யாழ்.சென்றல் அணி கே.சீ.சீ.சீ. அணியை 72 ஓட்டங்களால் வெற்றி பெற்று இச்சுற்றுப் போட்டித் தொடரில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் 2013 ஆம் ஆண்டு இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றல் அணி 47 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றனர்.

வி.றஜீவ்குமார் 55, சுதர்ஸன் 39, சலிஸ்ரன் 31, றொகான் 26, கபில்தேவ் 18, அன்றூ 18 ஓட்டங்களையும் பெற்றனர்

றம்மிய ராகுலன் 3 இலக்குகளையும், யனுதாஸ், கிருபவன், சாம்பவன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

243 வெற்றி இலக்கினை கொண்டு களமிறங்கிய கே.சீ.சீ.சீ. அணி 39.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களையே பெற்றனர்.

ராகுலன் 44, உத்தமன் 32, யனுதாஸ் 25, சாம்பவன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

விமலகாந் 4, சலிஸ்ரன், றொகான் ஆகியோர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு யாழ்.சென்றல் அணி 8.4 புள்ளிகளையும், கே.சீ.சீ.சீ அணி 2.5 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி

நோயல் விமலேந்திரன் வெற்றிக் கேடயத்திற்கான இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை காலை 8.30 மணிக்கு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அகில இலங்கை ரீதியில் 19 வயது பிரிவினருக்காக 5ஆவது தடவையாக நடத்தப்படும் இச் சுற்றுப்போட்டியில் 16 பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இவ் அணிகளுக்கான போட்டி நிகழ்வுகள் நாளை, நாளை மறுதினம் மற்றும் 21ஆம் திகதிகளில் வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி மைதானம் மற்றும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம் ஆகிய மூன்று இடங்களிலும் நடைபெறும் என யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுக் குழு அறிவித்துள்ளது.

# குமார் சங்கக்காரவுக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் பாராட்டு



கிரிக்கெட்டின் பைபிள் என வர்ணிக்கப்படும் விஸ்டன் சஞ்சிகையினால் இவ்வருடத்தின் சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரராக தெரிவு செய்யப்பட்ட குமார் சங்கக்காரவுக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நேற்று பாராட்டுத் தெரிவித்துள்ளது.

1889 ஆம் ஆண்டு முதலான, கடந்த வருட கால மாபெரும் வீரர்களின் விசேட குழுவில் குமார் இணைந்துள்ளார். விஸ்டனினால் அவர் வென்ற விருது ஒரு பூகோள அங்கீகாரம் மாத்திரமல்லாமல் உண்மையான மண்ணின் மைந்தன் ஒருவரின் தேசிய சாதனையாகும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

34 வயதான சங்கக்கார 2011ஆம் ஆண்டின் சிறந்த 5 வீரர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

108 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய அவர் 28 சதங்கள் உட்பட 9382 ஓட்டங்களையும் 325 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 13 சதங்கள் உட்பட 10472 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

## இந்திய நாடாளு...

தொடர்பாக அவர்கள் கலந்துரையாடவில்லை. இந்த விடயம் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் அரசியல் தீர்வுக்கு தேவையான அரசியலமைப்புத் திருத்தங்கள் என்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளது.

இந்தியக் குழுவினர் எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை. இலங்கை அரசின் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து அவர்களுக்கு விபரிக்கும் வாய்ப்பு கிடைத்தது என்று அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். (ந-8)

## அதிமுக, திமுக...

தொடர்பிலும், யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்திய அரசாங்கம் தெளிவாக புரிந்து கொண்டுள்ளது.

எனவே இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு சாத்தியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)


### பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப் பெண் தேவை.

தொடர்பு: 0773151326 (C-6392)



### தவறிவிட்டது

கடந்த 10ஆம் திகதி NP WF 7913 எனும் இலக்கங்களைக் கொண்ட பின்பக்க இலக்கத்தகடு யாழ் நகரிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக தொண்டைமானாறு செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: 0773099795 (8188)



### காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள 10 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0770711985 (C-6391)


# கொழும்பை கண்காணிக்க கமரா வாகனங்கள் ஏற்பாடு

கொழும்பு மாநகரில் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்ட வாகனங்களின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் இந்த நடமாடும் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

நடமாடும் கண்காணிப்பு கமரா முறைமை மூலம் கொழும்பை 24 மணிநேரமும் கண்காணிப்பது இதன் நோக்கமாகும். பொலிஸ் தலைமையகத்தில் இதற்கெனத் தனியான ஒரு பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள கமரா மூலம் கிடைக்கும் தகவல்களை இந்தப் பிரிவு கண்காணிக்கும் சி.சி.ரி.வி. தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கொழும்பு நகரத்தை பாதுகாத்தல் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## பிரேம்குமார்...

தீர்மானத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோரின் கடத்தல் சம்பவத்திற்கு அப்பால் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் காணாமல்போனமை, கடந்த பல வருடங்களில் பலர் காணாமல் போனமை, உதலகம ஆணைக்குழு முதலானவை குறித்து அரசாங்கம் தகவல்களை வழங்க வேண்டியிருக்கும் என லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)

## தனி ஈழத்திற்கு...

அமைப்பினால் நடத்தப்பட்ட இவ்வாறான வாக்கெடுப்பு முறையின் கீழ் சில நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், ஐ.நா. சபையின் தலையீட்டின் கீழேயே தமிழீழம் அமைப்பதற்கான இந்த வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பான நடவடிக்கைகளில் இந்திய அரசு முக்கிய பங்காற்ற முடியும் என்று தெரிவித்துள்ள கருணாநிதி, இதை செயல்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இந்தியா ஆதரவும், அழுத்தமும் தரவேண் டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ந-8,11)



நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081


## யாழ்.இளம் பெண்...

பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின்போது, இறந்த பெண்ணின் பெற்றோர் மற்றும் சகோதரி ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 04 . 1937



மறைவு 11 . 05 . 2010

### கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை

அப்பா என்ற வார்த்தைக்கு
இலக்கணமாக விளங்கி
எமக்கு நல்வழி காட்டிய
அன்புத் தந்தையே
ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயர்..
கலங்கிய கண்களோடு

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (8185)

## தூய யூஜின் டி மசனட் ஒன்றுகூடல் - 2012
### - சிறுவர், இளையோர் சங்கமம் -



அமலமரித் தியாகிகளின் (OMI) நிறுவுனர் தூய யூஜீனின்
விண்ணகப் பிறப்பின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்., கிளி., முல்லை., மன்னார், வவுனியா, மலையகம் மாவட்டங்களில் இருந்து 1000 சிறுவர், இளையோர் பங்கேற்பு!

காலம் : 19.04.2012

இடம் : புனித பத்திரிசியார் கல்லூரி.

முற்பகல் நிகழ்வுகள் : 09 மணி – 12.30 வரை
கலந்துரையாடல்களும் கருத்தமர்வுகளும்!

பிற்பகல் நிகழ்வுகள் : 02.30 மணி – 05.30 வரை
அரங்க நிகழ்வுகள்.

யாழ். ஆயர், நல்லை ஆதீனக் குருக்கள், இஸ்லாமிய, பௌத்த மதத் தலைவர்கள், அரச அதிபர், நீதிபதிகள் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

அமதிகள் (OMI) குழுமம்
யாழ் - மாகாணம்

(8187)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 02 . 1986



மறைவு 06 . 03 . 2012

### அமரர் சரவணபவானந்தம் தயாபரன் (கண்ணன்)

கடந்த 06.03.2012 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவுத்துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவி நல்கி உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் எமக்கு ஆறுதல் தந்த அனைவருக்கும் எம்மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் அந்தியேட்டி கிரியைகள் 19.04.2012 (வியாழக்கிழமை) நாளை அதிகாலை 4 மணியளவில் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (8173)

- குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.